தினமணி

## தலையங்கம்: கல்லெறிய பறக்கும் காக்கைகள்!

First Published : 08 Feb 2010 12:00:00 AM IST
Last Updated : 08 Feb 2010 01:21:15 AM IST

பருப்பு உற்பத்தி, மக்களின் தேவையைப் பூர்த்தி செய்வதாக இல்லை என்பதாலும், சில ஆண்டுகளாகப் பற்றாக்குறை நீடிப்பதாலும்தான் விலை உயர்ந்துள்ளது என்று விலைவாசி குறைப்பு நடவடிக்கைக்காக புதுதில்லியில் நடந்த மாநில முதல்வர்கள் மாநாட்டில் விளக்கமளித்த பிரதமர் மன்மோகன் சிங், பருப்பு சாகுபடியை அதிகரிக்கத் தீவிரத் திட்டம் செயல்படுத்தப்படும் என்றும் அறிவித்துள்ளார்.

விலைவாசி உயர்வில் மோசமான கட்டத்தைக் கடந்தாகிவிட்டது என்று நம்பிக்கையுடன் பேசியுள்ள பிரதமர், இதேபோன்று நாம் 1998-ம் ஆண்டிலும் விலைஉயர்வைச் சந்தித்தோம். சமாளித்தோம் என்றும் பேசியிருக்கிறார். மாநில அரசுகள் இதில் அதிக கவனம் செலுத்தி, இன்றியமையா பண்டங்கள் சட்டத்தின் கீழ் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி, பதுக்கலை ஒழிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பருப்பு உற்பத்தியில் 30 லட்சம் டன் பற்றாக்குறை இருப்பதாகப் பிரதமர் குறிப்பிட்டாலும், 2009 காரீப் பருவ பருப்பு சாகுபடியில் பருப்பு உற்பத்திக் குறைவு 7 சதவீதம் மட்டுமே. மொத்த உற்பத்தியில் காரீப் பருவ பருப்பு சாகுபடி 40 சதவீதம் மட்டுமே. மீதமுள்ள பெரும்பகுதி பருப்பு உற்பத்தி ரபி பருவத்தில் கிடைக்கிறது. ரபி பருவ சாகுபடி கணிப்புகள் நல்லவிதமாகவே இருக்கின்றன. இருந்தும்கூட, பருப்பு விலை உயர்கிறது.

தமிழ்நாட்டில் சென்ற மாதம் இதே தேதியில் சில்லறை வணிகத்தில் துவரம் பருப்பு கிலோ ரூ.77, உளுந்து ரூ.75, கடலைப் பருப்பு ரூ.44 ஆக இருந்தது. ஆனால் இன்றைய தேதியில் இவற்றின் விலை முறையே ரூ.62, ரூ.65, ரூ.34. துவரம் பருப்பின் விலை ரூ.15 வரை குறைந்திருக்கிறது. இந்த ஒரு மாதத்தில் பருப்பு உற்பத்தி பெருகிவிடவில்லை. ஆனால் விலை குறைகிறது! இன்னும் சொல்லப்போனால், இரு தினங்களுக்கு முன்பு, அதாவது முதலமைச்சர்கள் கூட்டம் நடப்பதற்கு முன்தினம், துவரம்பருப்பு கிலோ ரூ.55 வரை இறங்கிவந்தது என்றால், இதற்குக் காரணம் பருப்பு உற்பத்தி அல்ல, பதுக்கல் துர்புத்தியே காரணம்.

நவம்பர் 2009 கொள்முதல் விலை குறியீட்டெண் புள்ளிவிவரத்தின்படி விலை உயர்வு 4.78 சதவீதம். அதாவது மொத்தக் கொள்முதல் செய்வோர் கொடுக்க நேர்ந்த கூடுதல் விலையில் ஏற்பட்ட உயர்வு இவ்வளவுதான். ஆனால் நுகர்வோர் விலை குறியீட்டெண் புள்ளிவிவரப்படி அதே மாதத்தில் விலைஉயர்வு 11 சதவீதம். டிசம்பர் மாதத்தில் இது 19 சதவீதம் வரை உயர்ந்தது. கொள்முதல் செய்யும் பெரும்முதலாளிகள் தங்கள் லாபத்தை எந்தக் காலகட்டத்திலும் இம்மியும் குறைத்துக்கொள்ள முன்வருவதில்லை. மாறாக, பயன்படுத்திக்கொள்ளவே முயல்கின்றனர்.

இதில் இன்னொரு புள்ளிவிவரம் மிகவும் வேதனை தருவதாக இருக்கிறது. அரசு மதிப்பிடும் நுகர்வோருக்கான குறியீட்டுஎண் புள்ளிவிவரத்தை விவசாயிகள் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு மட்டும் என்று பொருத்திப் பார்க்கும்போது விலைவாசி உயர்வு 15.6 சதவீதமாக இருக்கிறது. விலைஉயர்வின் மிக அதிகமான பாரத்தைச் சுமந்து வருந்துபவர்கள் இவர்கள்தான். இவர்கள் பெறும் ஊதியம் குறைவு. அந்தக் குறைந்த ஊதியத்தில் சரிபாதியை உணவுப்பொருள் வாங்குவதற்கு மட்டுமே செலவு செய்ய வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகிறார்கள்.

ஏழை மற்றும் நடுத்தர மக்களைப் பாதிக்கும் விலைவாசி உயர்வு என்பது அரிசி, கோதுமை, பருப்பு, சமையல் எண்ணெய் ஆகியவற்றின் மீதான விலை உயர்வு மட்டுமே என்பது வெளிப்படையாகத் தெரிந்திருக்கிறது. பன்னாட்டு நிறுவனம் என்றாலும் உள்நாட்டு நிறுவனம் என்றாலும், ஒரு தொழிலில் ஏற்பட்ட சரிவை மற்ற தொழிலில் ஈடுகட்டவே முயல்கின்றன. 2008, 2009 காலகட்டத்தில் அமெரிக்காவில் ஏற்பட்ட பொருளாதார சரிவுகளின் தொடர் நிகழ்வாக இந்திய நிறுவனங்களும் பாதிக்கப்பட்டபோது, அவர்கள் தங்கள் லாபத்தை ஈடுசெய்வதற்காக இந்திய உணவுதானியச் சந்தையைக் கையில் எடுத்துக்கொண்டதால்தான் இந்த விலை உயர்வு ஏற்பட்டது. ஏனென்றால், 2008, 2009}ம் ஆண்டுகளில் இந்தியாவில் உணவு தானிய உற்பத்தி நல்லவிதமாகவே இருந்தது. விலை உயர்வுக்கு எந்தவித நியாயமான காரணங்களும் இல்லை.

சில்லறை வணிகத்தில் உணவு தானியத்தின் விலைக்கும், விளைநிலத்தில் அதற்கு அளிக்கப்படும் விலைக்கும் மிகப்பெரிய இடைவெளி இருக்கிறது. இது களையப்பட வேண்டும் என்று கூறும் பிரதமர் மன்மோகன் சிங், சந்தையில் போட்டி நிறைய இருந்தால் விலை குறையும். ஆகவே சில்லறை வணிகத்தை அதிகரிக்க வழிகாணப்படும். பன்னாட்டு நிறுவனங்களுக்கு அனுமதி அளிக்க மாட்டோம் என்று கூறியுள்ளார்.

பிரச்னை வெறும் பன்னாட்டு நிறுவனங்கள் மட்டுமல்ல, உள்நாட்டில் சங்கிலித்தொடர் நிறுவனங்கள் நடத்துகிற, உணவுதானியம் உள்பட பல்வேறு தொழில்களைக் கையில் வைத்திருக்கிற இந்தியப் பெருநிறுவனங்களின் பங்கு இந்த விலை உயர்வில் இருக்கிறது என்பதுதான் உண்மை.

முதலமைச்சர் கூட்டத்தைக் கூட்டி, நடவடிக்கையை இறுக்குகிறார்கள் என்பது புரிந்தவுடனே பருப்புகளின் விலை, ஒரே மாதத்தில் சராசரியாக ரூ.10 குறையும் என்றால், இந்தக் கூட்டத்தை ஏன் முன்னதாகவே கூட்டியிருக்கக்கூடாது? கொஞ்சம் அசைவு காட்டினாலே களத்திலிருந்து காகங்கள் பறக்கின்றன என்கிறபோது, ஓரிரு கல் எறிந்து தானியத்தைக் காப்பாற்றினால் என்ன தவறு!

பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன் என்ற அணுகுமுறை மத்திய, மாநில அரசுகளால் கடைப்பிடிக்கப்படுவதால்தான் உணவு தானிய விலை அதிகரிப்பே தவிர, உற்பத்திக் குறைவால் மட்டும் அல்ல என்பது பிரதமருக்குத் தெரியாதா என்ன?

**சர்க்கரை சாப்பிடாததால் யாரும் சாக மாட்டார்கள்!: பவார் கட்சி பத்திரிகை தலையங்கம்**

First Published : 08 Feb 2010 12:00:00 AM IST
Last Updated : 08 Feb 2010 08:19:42 AM IST



மும்பை,பிப்.7: ""சர்க்கரை சாப்பிடாவிட்டால் யாரும் செத்துவிட மாட்டார்கள், சர்க்கரையை ஏன்தான் அத்தியாவசியப் பொருள்களில் ஒன்றாகக் கருதுகிறார்கள் என்றே தெரியவில்லை, சர்க்கரை அப்படியே விலை ஏறினால்தான் என்ன, அதனால் குடியா முழுகிவிடும்?'' என்று ஒரு பத்திரிகையில் தலையங்கமே தீட்டப்பட்டிருக்கிறது.

அந்தப் பத்திரிகையின் பெயர் ராஷ்டிரவாதி. சரத் பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரஸ் கட்சி சார்பில் நடத்தப்படுவது. அதன் நிர்வாக ஆசிரியர் தேசியவாத காங்கிரஸ் கட்சியின் மகாராஷ்டிர மாநிலத் தலைவர் மதுகர் பிச்சட். பத்திரிகை ஆசிரியர் சுதிர் போங்கலே.

"சர்க்கரை, உப்பு, அரிசி போன்ற வெண் பண்டங்கள் விஷத்துக்குச் சமம், எனவே 40 வயதுக்கு மேல் போனால் இவற்றைக் குறைத்துக் கொள்ளுங்கள் என்று டாக்டர்கள் கூறுகிறார்கள். சர்க்கரை வியாதி வந்தவர்கள் எந்த வகையிலும் சாப்பாட்டிலும் பானத்திலும் சர்க்கரையை அறவே சேர்த்துக் கொள்வதே இல்லை. மனிதனுக்கு சர்க்கரை அத்தியாவசியமான உணவுப் பண்டமே அல்ல. அதன் விலை ஏறிவிட்டது என்று ஏன்தான் இப்படி கூரை மீது நின்று இப்படி கூப்பாடு போடுகிறார்கள் என்றே தெரியவில்லை.

சராசரியாக இந்தியர்களின் மாதச் செலவில் சர்க்கரை உள்ளிட்ட சாப்பாட்டுச் செலவு 10% முதல் 15% வரைதான் இருக்கும்.

பெட்ரோல், டீசல், கார், பைக், அழகு சாதனங்கள், சினிமா - டிராமா, விளையாட்டு, டி.வி., பிரிட்ஜ் போன்றவற்றஉக்காகும் செலவு உயரும்போதெல்லாம் கூக்குரல் எழுப்பாதவர்கள் இந்த சர்க்கரைக்கு மட்டும் ஏன் இப்படி கூட்டமாக கூச்சல் எழுப்புகிறார்கள் என்று தெரியவில்லை.

சர்க்கரை வியாதிக்காரர்கள் சர்க்கரையே சாப்பிடாமல் இருக்கவில்லையா? மற்றவர்களும் இதைப் பின்பற்றி சர்க்கரையே வேண்டாம் என்று ஒதுக்கலாமே?

சர்க்கரை கிலோவுக்கு 10 ரூபாய் முதல் 15 ரூபாய்வரை உயர்ந்தால்தான் என்ன? 4 அல்லது 5 பேர் கொண்ட குடும்பத்துக்குக் கூடுதலாக 60 ரூபாயோ 90 ரூபாயோ தானே செலவாகப் போகிறது? இதைத் தாங்கிக் கொள்ளக்கூடாதா?

ஆறாவது ஊதியக்குழு பரிந்துரைகள் அமலாக்கப்பட்ட பிறகு மத்திய, மாநில அரசுகளின் ஊழியர்களுடைய சம்பளம் அதிகரித்த அளவோடு ஒப்பிடும்போது இந்த சர்க்கரை விலையேற்றம் ஒரு பெரிய விஷயமா?


சர்க்கரை விலை உயர்வால் பல குடும்பங்கள் தத்தளிக்கின்றன என்பதெல்லாம் வெறும் பேச்சு' என்கிறது அந்த தலையங்கம்.

சுமார் ஓராண்டுக்கு முன்பு கிலோ 22 ரூபாயாக வெளிச் சந்தையில் விற்கப்பட்ட சர்க்கரை இப்போது கிலோ ரூ.42 முதல் ரூ.43 வரை விற்கப்படுகிறது. இது நாடு முழுக்க மக்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தி வருகிறது. இது காங்கிரஸôரையும் எட்டியிருக்கிறது. எனவே அவர்கள் உணவுத்துறை அமைச்சரான சரத் பவாரை, விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்த ஆரம்பித்துள்ளனர். எனவே காங்கிரஸôர் மீதுள்ள கோபத்தை இப்படி தலையங்கமாக வெளிப்படுத்தியிருக்கிறது தேசியவாத காங்கிரஸ் கட்சி.

விலைவாசி உயர்வுக்கு சரத் பவார் மட்டுமே காரணம் அல்ல என்று அவருடைய கட்சியைச் சேர்ந்த மத்திய அமைச்சர் பிரபுல் படேல் தில்லியில் நிருபர்களிடம் அழுத்தம் திருத்தமாகக் கூறியிருக்கிறார். பிரதமரும் மத்திய அமைச்சரவையும்கூட இதற்கு பொறுப்பு என்பதே அவருடைய பதிலுக்கு அர்த்தம். எனவே பவாரை பலிகடா ஆக்க முயற்சி நடக்கிறதோ என்ற சந்தேகம் தேசியவாத காங்கிரஸôருக்கு எழுந்திருப்பது இந்த தலையங்கத்திலிருந்து தெரிகிறது.

## பி.டி. கத்தரிக்காய் விவகாரம்: வர்த்தக நோக்கில் மத்திய அரசு பரிசீலனை- ஜகி வாசுதேவ் பேட்டி

First Published : 08 Feb 2010 12:00:00 AM IST
Last Updated : 08 Feb 2010 08:00:58 AM IST



கோவை, பிப்.7: மரபணு மாற்றம் செய்யப்பட்ட கத்தரிக்காய்க்கு (பி.டி.கத்தரிக்காய்) அனுமதி அளிப்பது தொடர்பாக மத்திய அரசு வர்த்தக நோக்கில் பரிசீலனை செய்து வருகிறது என ஈஷா யோக மைய நிறுவனர் ஜகி வாசுதேவ் கூறினார்.

இதுகுறித்து அவர் செய்தியாளர்களிடம் ஞாயிற்றுக்கிழமை கூறியது:

மரபணு மாற்றம் செய்யப்பட்ட உணவுப் பொருள்களில் மிகுந்த நச்சுத்தன்மை உள்ளது. பல ஆயிரம் ஆண்டுகளாக கத்தரிக்காய் சாகுபடி நன்றாக உள்ளது.

இந் நிலையில், ஆரோக்கியத்தைப் பாதிக்கும் பி.டி. ரக பயிர்களை சந்தைக்கு கொண்டு வரத் தேவையில்லை. இது பொறுப்பற்ற செயல். பி.டி. கத்தரிக்காய்க்கு அனுமதி அளித்தால் அனைத்து உணவுப் பொருள்களும் சந்தைக்கு வந்துவிடும். இது மிகுந்த ஆபத்தை விளைவிக்கும்.

ஐரோப்பா உள்பட பல்வேறு நாடுகளில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட பயிர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளில் அரசை மீறி தனியார் ஆதிக்கம் செலுத்தி வருவதால் வேறு வழியின்றி அங்கு பி.டி. ரக பயிர்கள் பயிரிடப்பட்டன. அதன் பாதிப்பு இன்றும் தெரிகிறது.

பி.டி. பயிர்களை பயிரிடக் கூடாது என வேளாண் விஞ்ஞானிகள், இயற்கை ஆர்வலர்கள், விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர். இருப்பினும், மக்களின் நலனில் அக்கறை கொள்ளாமல் பி.டி. ரக பயிர்களை சந்தைக்கு கொண்டு வர மத்திய அரசு வர்த்தக நோக்கில் பரிசீலனை செய்து வருகிறது.

வெளிநாட்டு நிறுவனங்களிடம் இருந்து விதைகளை வாங்கும் நிலை தொடர்ந்தால் இந்தியா அடிமைப்படும் சூழல் உருவாகும். நாட்டில் பல விதமான விதைகள் குறைந்து வருகின்றன. 60 சதம் பேர் சைவ உணவுகளையும், 40 சதம் பேர் அசைவ உணவுகளையும் விரும்பிச் சாப்பிடுகின்றனர். மனிதனுக்குத் தேவையான சத்து, சைவ உணவில்தான் இருக்கிறது. ஆனால், அதற்கு நல்ல விதைகள் தேவை. அவற்றை இயற்கையான முறையில் உருவாக்க வேண்டும்.

நல்ல விதைகள் விவசாயிகள் கையில் இருக்க வேண்டும். அதனால், மேற்கொள்ளும் ஆராய்ச்சிகள் பக்குவமாகவும், இயற்கையாகவும் இருப்பது அவசியம்.

மரபணு மாற்றம் செய்யப்பட்ட கத்தரிக்காய்க்கு அனுமதி அளிப்பது தொடர்பாக அவசரம் காட்டப்படமாட்டாது என தமிழக அரசு அறிவித்துள்ளது விவசாயிகளை மகிழ்ச்சி அடையச் செய்துள்ளது. இருப்பினும், அவற்றை முற்றிலும் தடை செய்ய வேண்டும். இது குறித்து ஈஷா தரப்பில் அரசிடம் வலியுறுத்தப்படும்.

மரபணு மாற்றம் செய்யப்பட்ட கத்தரியை தடை செய்து அனைத்து மக்களையும் காக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் அவர்.

## விவசாய சங்க கோரிக்கை மாநாடு

First Published : 08 Feb 2010 04:09:22 AM IST

அன்னூர், பிப். 7 : கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்கம் சார்பில் சி.நாராயணசாமி நாயுடு 97-வது பிறந்தநாள் விழா மற்றும் விவசாய சங்க கோரிக்கை மாநாடு ஆகியவை அன்னூர் மகரிஷி மகாலில் சனிக்கிழமை நடைபெற்றது.

விவசாய மின் இணைப்புக்கு மீட்டர் பொருத்துவதை கைவிடுவது, கள் இறக்க அனுமதி வழங்குவது, கள் இறக்கியதாக போடப்பட்டுள்ள வழக்குகளை திருப்பப் பெறுவது, அவினாசி-அத்திக்கடவு திட்டத்தை நிறைவேற்றுவது, அன்னூரை மையமாகக் கொண்டு புதிய தாலுகா அமைப்பது, அன்னூர் பகுதிகளில் காற்றில் சேதமடைந்த வாழைகளுக்கு உரிய நஷ்டஈடு வழங்குவது, பால் விலையை ரூ.25 ஆக உயர்த்த வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## உருளைக்கிழங்கு தொழிலாளர்கள் கூலி உயர்வு பிரச்னையில் உடன்பாடு

First Published : 08 Feb 2010 04:07:51 AM IST

மேட்டுப்பாளையம், பிப். 7 : மேட்டுப்பாளையம் உருளைக்கிழங்கு மண்டி உரிமையாளர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் இடையே நடைபெற்ற கூலி உயர்வு பேச்சுவார்த்தையில் சுமூக உடன்பாடு ஏற்பட்டது.

மேட்டுப்பாளையத்தில் உள்ள 60-க்கும் மேற்பட்ட கிழங்கு மண்டிகளில் பெண்கள் உட்பட 1000-த்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள், கிழங்கை தரம்பிரித்து எடைபோடும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். 2006 மார்ச் மாதம் போடப்பட்ட ஒப்பந்தப்படி, தொழிலாளர்களுக்கு 45 கிலோ கொண்ட ஒரு மூட்டையை தரம் பிரித்து எடை போட ரூ3.30 கூலியாக வழங்கப்பட்டது. இந்த ஒப்பந்தக் காலம் முடிவடைந்து ஒரு வருடம் ஆகியுள்ள நிலையில், புதிய ஒப்பந்தத்தில் ஒரு மூட்டைக்கு ரூ.12 வரை கூலி உயர்வு வழங்க வேண்டுமென தொழிலாளர்கள் தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்டது.

இது தொடர்பாக கடந்த பிப்.1ல் நடைபெற்ற பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்ததால் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்தனர். இதையடுத்து, பிப்.6ல் பேச்சுவார்த்தை நடத்த முடிவு செய்யப்பட்டது. தொடர்ந்து, மேட்டுப்பாளையம் உருளைக்கிழங்கு வர்த்தக சபை அலுவலக வளாகத்தில் 3-வது கட்டப் பேச்சுவார்த்தை பிப்.6 சனிக்கிழமை நடைபெற்றது. உருளைக்கிழங்கு வர்த்தக சபை செயலர் பி.ரங்கசாமி, துணைத் தலைவர் எம்.என்.கோபால், துணைச் செயலர் தேவராஜன், பொருளாளர் பெள்ளன் உட்பட நிர்வாகிகளும், தொழிலாளர்கள் தரப்பில் சங்கத் தலைவர் அப்துல் ரசீது, உறுப்பினர்கள் ராஜன், ரங்கராஜன், பசுபதி, செந்தில், சிவாஜி உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

நீலகிரி கிழங்குகளை தரம்பிரித்து சுத்தம் செய்து எடைபோட 45 கிலோ மூட்டை ஒன்றுக்கு ரூ.6 என கூலி உயர்வு செய்யப்பட்டது. தொழிலாளர் தரப்பில் அதை ஏற்றுக்கொண்டதால் சுமூக உடன்பாடு ஏற்பட்டது.

**பாம்பாற்றின் குறுக்கே அணை கட்டினால் 70 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் தரிசாகும்**

First Published : 07 Feb 2010 01:48:26 AM IST

கரூர், பிப். 6: பாம்பாற்றின் குறுக்கே அணை கட்டினால் 70 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் தரிசாகும் என்று அமராவதி நதிநீர் பாசன பாதுகாப்பு இயக்கம் எச்சரித்துள்ளது.

இதுகுறித்து அந்த இயக்கத்தின் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கை:

அமராவதி அணை 1957-ல் காமராஜர் ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்டது. 80 அடி கொள்ளவு கொண்ட இந்த அணையிலிருந்து வெளியேறும் தண்ணீர் சுமார் 143 கி.மீ. தொலைவிற்கு சென்று, கரூர் மாவட்டம் திருமுக்கூடலூரில் காவிரியில் கலக்கிறது.

அமராவதியுடன் பாலாறு, பொருந்தலாறு, வரதமாநதி, குடகனாறு, பரப்பலாறு, குதிரையாறு ஆகியவை கலக்கின்றன. பழைய ஆயக்கட்டு மூலமாக 30 ஆயிரம் ஏக்கர் நிலமும், புதிய ஆயக்கட்டு மூலமாக 40 ஆயிரம் ஏக்கர் நிலமும் பாசன வசதி பெற்று வருகிறது. கரூர், ஈரோடு, திருப்பூர், கோவை மாவட்டங்களுக்கு குடிநீர் வழங்கி வருகிறது. 3 போகங்கள் விளைந்து வந்த அமராவதி பாசன நிலங்கள் தற்போது ஒரு போகத்திற்கே கடுமையான கஷ்டங்களைச் சந்தித்து வருகிறது.

அமராவதி அணைக்கு தண்ணீர் தரும் முக்கிய நதியாக பாம்பாறு விளங்கி வருகிறது. இந்நிலையில் பாம்பாற்றின் குறுக்கே மேற்குத் தொடர்ச்சி மலையில் மறையூர் அருகே

ரூ. 300 கோடியில் கேரள அரசு அணை கட்டி மின்சாரம் உற்பத்தி செய்ய திட்டமிட்டுள்ளது.

இவ்வாறு பாம்பாற்றின் குறுக்கே அணை கட்டும் போது, பாம்பாற்றில் கலக்கும் தேனாறு, கூட்டாறுகளின் தண்ணீரும் அணையில் தேங்கும் நிலை ஏற்படும். இதனால், அமராவதி அணைக்கு வரும் அனைத்து நீரும் தடுக்கப்பட்டுவிடும்.

இதனால், 70 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் தரிசாவதோடு, 4 மாவட்ட மக்களின் குடிநீருக்கும் தட்டுப்பாடு ஏற்படும். எனவே, தமிழக முதல்வரும், துணை முதல்வரும் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து கேரள அரசின் முயற்சியை தடுக்க வேண்டும்.

**வீடுகளில் மூலிகைத் தோட்டம் அவசியம்**

First Published : 07 Feb 2010 03:47:20 AM IST
Last Updated : 07 Feb 2010 11:14:59 AM IST

தஞ்சாவூர், பிப். 6: பாரம்பரிய மூலிகை மருத்துவத்தை பரவலாக்க, வீடுகள்தோறும் மூலிகைத் தோட்டம் அமைப்பதும்- ஊக்குவிப்பதும் அவசியம் என்றார் இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதியின் முதன்மைச் செயலர் மற்றும் இயக்குநர் ஜி.ஏ. ராஜ்குமார்.

தஞ்சாவூர் சாஸ்த்ரா பல்கலைக்கழகத்தில் சனிக்கிழமை நடைபெற்ற மூலிகை- கனிம மருந்துப் பொருள்கள் குறித்த சர்வதேச கருத்தரங்கில் மூலிகை வளம் குறித்த புத்தகத்தை வெளியிட்டு அவர் மேலும் பேசியது:

ஆசிய கண்டத்தில் பல்வேறு மூலிகை வளங்கள் மிக்க அடந்த காடுகள் நிறைந்துள்ளன. பல்லுயிர் பெருக்கத்துக்கு வாய்ப்புள்ள மூலிகை வளமிக்க பகுதிகள் உலகளவில் 18 இடங்களில் உள்ளன.

அவற்றில் கிழக்கு இமாலயம், வடக்கு போர்னியோ, தீபகற்ப மலேசியா, இலங்கை, பிலிப்பைன்ஸ், மேற்கு தொடர்ச்சி மலைகள் ஆகிய ஆறு பகுதிகள் ஆசிய கண்டத்தில் உள்ளன.

சீனாவில் 30,000, இந்தோனேஷியாவில் 20,000, இந்தியாவில் 17,000, மியான்மர், தாய்லாந்து, மலேசியா நாடுகளில் 12,000 வகையான மூலிகைத் தாவர இனங்கள் உள்ளன. இவற்றில் இந்தியாவில் 7,000 முதல் 8,000 வரையிலான மூலிகை தாவரங்கள் உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளன.

இந்த மூலிகைத் தாவரங்கள் ஆயுர்வேதம், சித்தா, திபெத்திய மருத்துவம், சைனீஸ் மருத்துவம் என்ற பெயர்களில் பாரம்பரிய மருத்துவமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

சைனீஸ் மருத்துவத்தில் அக்குபஞ்சர் சிகிச்சையும், அரேபிய மருத்துவத்தில் யுனானி மருத்துவச் சிகிச்சையும் தற்போது பரவலாகி வருகிறது. மூலிகை மருத்துவம் தொடர்பாக 500 ஆண்டுகளுக்கு முன்பே ரிக், அதர்மன வேதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிராமங்களில் மூலிகை மருத்துவம் பரவலாகி வரும் நிலையில், நகர்ப் பகுதிகளிலும் மூலிகைத் தாவர மருத்துவத்தைப் பரவலாக்க வேண்டும்.

வீடுகளில் புதினா, துளசி, வேம்பு, கற்றாழை போன்ற மருத்துவ குணமிக்க மூலிகைத் தாவரங்களை வளர்க்க வேண்டும். மேலும், ஆயுர்வேத தோட்டங்கள் உருவாக்க வேண்டும்.

மூலிகை மருத்துவத்தை வளரும் மற்றும் வளரா நாடுகளில் 80 சத மக்கள் பயனபடுத்தி வருகின்றனர். வீடுகளில் மூலிகைத் தோட்டம் வளர்ப்பதை ஊக்குவிப்பது அவசியம் என்றார் ராஜ்குமார்.

ஆயுர்வேத யுனானி சித்தா ஹோமியோபதித் (ஆயுஸ்) துறைச் செயலர் எஸ். ஜலஜா பேசியது:

மூலிகை மருத்துவத்துக்கான சர்வதேச சந்தையின் தேவை 62 பில்லியன் டாலராக உள்ளது. இதில் இந்தியாவின் பங்கு ரூ. 800 கோடி என்ற அளவில் உள்ளது. எனினும், இதை அதிகரிக்கும் வகையில் இந்தியாவில் மூலிகை வளம் நிறைந்துள்ளது.

மூலிகை மருத்துவம் தயாரிக்கும் இந்திய நிறுவனங்களின் ஆண்டு வர்த்தக பரிவர்த்தனை ரூ. 9,000 கோடியாக உள்ளது. ஜ்எனவே, மத்திய அரசு 10-வது ஐந்தாண்டு திட்டத்தில் மூலிகை மருத்துவத் துறைக்கு ரூ. 1,000 கோடி ஒதுக்கியது. தற்போது ரூ. 4,000 கோடி ஒதுக்கியுள்ளது.

அடர்ந்த காடுகளில்தான் 80 சத மருத்துவ மூலிகைகள் கிடைக்கின்றன. அவற்றை அடையாளம் கண்டு பறிப்பதற்கும், விளைவிப்பதற்கும் மக்களுக்குப் பயிற்சி அளிப்பது அவசியமாகிறது. மூலிகை மருத்துவத் தாவரங்களை அழிவில் இருந்து பாதுகாக்க வேண்டியதன் அவசியம் தற்போது அதிகரித்துள்ளது என்றார் ஜலஜா.

சாஸ்த்ரா பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஆர். சேதுராமன் வரவேற்றார். பதிவாளர் ஸ்ரீவத்சவா, ஆயுஸ் துறைச் செயலர் (தமிழ்நாடு) விஜயராஜ்குமார், பேராசிரியர் பிருந்தா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**மேட்டூர் அணை: 76.96 அடி**

First Published : 07 Feb 2010 02:57:43 AM IST

தஞ்சாவூர், பிப். 6: மேட்டூர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை மாலை 76.96 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 768 கன அடி தண்ணீர் வந்துகொண்டிருந்தது. அணையில் இருந்து 2,000 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. கல்லணையில் இருந்து டெல்டா மாவட்ட பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படவில்லை.

**விவசாயிகளுக்கு செயல்விளக்கம்**

First Published : 07 Feb 2010 06:21:23 AM IST

கிருஷ்ணகிரி,பிப்.6: கிருஷ்ணகிரியில், கட்டை கரும்பில் இடைவெளி நிரப்புதல் மூலம் விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் கிடைப்பது குறித்து செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.

இதுகுறித்து கோட்ட கரும்பு அலுவலர் பி.மல்லேஸ்வரன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி அணை மண்டல ஊரக வளர்ச்சி நிறுவன வேளாண்மை பண்ணையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் கட்டை கரும்பு சாகுபடியில் இடைவெளி நிரப்புதல் குறித்த செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.

மாவட்டத்தில் கட்டை கரும்பு சாகுபடியில் போதிய பயிர் எண்ணிக்கை பராமரிப்பு இல்லாததால் ஏக்கருக்கு குறைந்தது 10 டன் வரை மகசூல் இழப்பு ஏற்படுகிறது. இதனால் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.16 ஆயிரம் வரை இழப்பை சந்திக்கின்றனர். இதை தவிர்ப்பது குறித்து செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் விவசாய சங்க துணைத் தலைவர் கே.ராமகவுண்டர், மாவட்டத் தலைவர் லோகாபிராம், மண்டல ஊரக வளர்ச்சி நிறுவன பண்ணை மேலாளர் ஆர்.மனோகரன், காவேரிப்பட்டணம் கரும்பு உதவியாளர் பாலகிருஷ்ணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**வேளாண் விரிவாக்க மையம் இடமாற்றம்**

First Published : 08 Feb 2010 12:00:00 AM IST

சிதம்பரம், பிப். 7: சிதம்பரம் துணை வேளாண் விரிவாக்க மையம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

சிதம்பரம் கச்சேரித்தெருவில் செயல்பட்டு வந்த துணை வேளாண்மை விரிவாக்க மையம், சிதம்பரம் உழவர் சந்தை வளாகத்தில் அமைந்துள்ள வேளாண்மை தகவல் மைய கட்டடத்துக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

எனவே, விவசாயிகள் தங்களுக்கு தேவையான வேளாண் இடுபொருள்களை பெறவும், தொழில்நுட்ப ஆலோசனைகளுக்கும், புதிய வேளாண் விரிவாக்க மையத்தை அணுகுமாறு பரங்கிப்பேட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் இ.தனசேகர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## 2,500 ஏக்கரில் சிறப்புப் பொருளாதார மண்டலம்: இந்தியா புல்ஸ் திட்டம்

First Published : 07 Feb 2010 12:44:55 AM IST

நாசிக், பிப்.6: மகாராஷ்டிர தொழில் மேம்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து இந்தியா புல்ஸ் நிறுவனம் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது. இப்புதிய மண்டலம் 2,500 ஏக்கரில் உருவாக உள்ளது.

இந்த தொழில் சிறப்புப் பொருளாதார மண்டலம் நாசிக்-சினார் மற்றும் இகட்புரி பகுதியில் அமையவுள்ளது.

இந்த பொருளாதார மண்டலத்தில் ஆட்டோமொபைல் தொழிற்சாலைகள், மருந்து பொருள் தயாரிப்பு நிறுவனங்கள், உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை மற்றும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் தங்களது தொழிற்சாலைகளை அமைக்க உள்ளன.

இந்த வளாகத்தில் சர்வதேச வர்த்தக மையம், ஹோட்டல், பள்ளி மற்றும் பொழுதுபோக்கு மையம், மருத்துவமனை உள்ளிட்டவை அமையும் என்று நிறுவனத்தைச் சேர்ந்த இத்திட்டத்தைச் செயல்படுத்தும் பிரிவின் தலைவர் கிஷோர் காஜிபியே தெரிவித்தார்.

இந்நிறுவனம் உருவாக்கும் மூன்றாவது சிறப்புப் பொருளாதார மண்டலம் இதுவாகும். ஏற்கெனவே மும்பை மற்றும் புணேயில் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை இந்நிறுவனம் உருவாக்கியுள்ளது.

இது தவிர, இந்தியாபுல்ஸ் குழுமம் 1,335 மெகாவாட் மின்னுற்பத்தி நிலையத்தை அமைக்கத் திட்டமிட்டுள்ளதாகவும், இதேபோல ரூ. 25 ஆயிரம் கோடி முதலீட்டில் பல்லாயிரக் கணக்கானோருக்கு வேலை வாய்ப்பை உருவாக்கும் திட்டத்தை செயல்படுத்த உள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

இந்நிறுவனம் உருவாக்கும் மின்சாரத்தில் 950 மெகாவாட் மின்சாரம் மகாராஷ்டிர மாநில மின்வாரிய விநியோக நிறுவனத்துக்கு அளிக்கப்படும்.

தினமலர்

**துவரம் பருப்பு விலை அதிகரிப்பு ஏன்? : பல்கலை துணைவேந்தர் பேச்சு**

கோவை : ""துவரை சாகுபடி பரப்பளவு மற்றும் உற்பத்தி வெகுவாக குறைந்துள்ளதால், சந்தையில் பருப்பு விலை அதிகரித்துள்ளது,'' என, கோவை வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேச பூபதி பேசினார்.
"எல்.ஆர்.ஜி. 41' துவரை ரக செயல்விளக்க நிகழ்ச்சி, கோவை வேளாண் பல்கலை சார்பில், தொண்டாமுத்தூர் அடுத்துள்ள போளுவாம்பட்டி கிராமத்தில், நடந்தது. வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி தலைமையிலான விஞ்ஞானிகள், வேளாண் துறை அதிகாரிகள், முதல் நிலை செயல்விளக்கத் திடலை பார்வையிட்டனர்.
இந்நிகழ்ச்சியில், துணைவேந்தர் முருகேச பூபதி பேசியதாவது: தமிழகத்தில் தற்போது 29 ஆயிரம் ஹெக்டர் நிலப்பரப்பில் துவரை சாகுபடி செய்யப்படுகிறது. காலநிலை மாற்றம், வேலையாள் தட்டுப்பாடு, நவீன தொழில் நுட்பங்களை சரிவர கடைபிடிக்காதது, ஆகிய காரணங்களால் துவரை சாகுபடி பரப்பளவு மற்றும் உற்பத்தி வெகுவாக குறைந்துள்ளது.
இதனால், சந்தைகளில் பருப்பு விலை அதிகரித்துள்ளது. துவரை உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனை பெருக்க

மத்திய, மாநில அரசுகள் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன.
ஆந்திராவில் வெளியிடப்பட்ட "எல்.ஆர்.ஜி. 41' துவரை ரகம், தற்போது அனைத்து தென் மாநிலங்களிலும் பயிரிட பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இது அதிக வயதுடைய (200 முதல் 210 நாட்கள்), வறட்சி மற்றும் காய்ப்புழுவை தாங்கி வளரும் ரகம். மானாவாரியில் ஹெக்டருக்கு 1.8 - 2.0 டன்கள் மகசூலும், இறவையில் ஹெக்டருக்கு 2.0 - 2.5 டன்கள் மகசூலும் தரும் திறன் பெற்றது.
ஆடிப்பட்டத்தில் சாகுபடி செய்வதற்கு ஏற்றது. அதிக காய் எண்ணிக்கை, அதிக கிளைகள், பருமனான விதைகள் ஆகிய சிறப்பு பண்புகளை கொண்டது.
பிற துவரை ரகங்களை விட கூடுதல் மகசூல் தரும் இந்த துவரை ரகத்தை, விவசாயிகள் அதிகளவில் சாகுபடி செய்யலாம். இந்த ரகத்தின் விதைகளை அதிகளவில் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வினியோகம் செய்யும் வாய்ப்புகளை வேளாண் விஞ்ஞானிகளும் அதிகாரிகளும் ஆராய வேண்டும். இவ்வாறு, முருகேச பூபதி பேசினார்.

**பொன்மணி நெல் கொள்முதல் செய்ய மறுப்பு : ஸ்ரீமுஷ்ணம் அருகே விவசாயிகள் அலைக்கழிப்பு**

ஸ்ரீமுஷ்ணம் : ஸ்ரீமுஷ்ணம் அடுத்த கள்ளிப்பாடி நேரடி கொள் முதல் நிலையத்தில் குறிப் பிட்ட ரக நெல் கொள்முதல் செய்ய மறுத்து விவசாயிகளை அலைக்கழித்து வருகின்றனர்.
ஸ்ரீமுஷ்ணம் பகுதியில் சம்பா பருவ நெல்லை வியாபாரிகள் குறைந்த விலைக்கு கொள்முதல் செய்து வந்ததால் விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். இதனை கருத்தில் கொண்டு அரசு ஸ்ரீமுஷ் ணம், ஆனந்தகுடி, குணமங்கலம், கள்ளிப்பாடி, ஸ்ரீநெடுஞ்சேரி உள்ளிட்ட இடங்களில் நேரடி கொள் முதல் நிலையங்களை திறந்து விவசாயிகளிடம் இருந்து நெல்லை நேரடியாக கொள்முதல் செய்து வருகிறது. அறுவடை சீசன் துவங் கிய நேரத்தில் அனைத்து ரக நெல்லையும் அதன் தரத்திற்கு ஏற்ப விலை நிர்ணயித்து கொள்முதல் செய்தனர். தற்போது வரத்து அதிகரிக்கவே நெல்லை விற்பனை செய்ய நேரடி கொள்முதல் நிலையத்தில் விவசாயிகள் நான்கு நாட்கள் காத்திருக்க வேண்டியுள்ளது.
இந்நிலையில் கள்ளிப் பாடி மையத்தில் கடந்த 2ம் தேதி வரை கொள்முதல் செய்த பொன்மணி ரக நெல் தரம் குறைவாக இருப்பதாக கூறிய தரக்கட்டுப்பாட்டு அதிகாரி, இனி பொன்மணி ரக நெல்லை கொள்முதல் செய்ய வேண்டாம். அதனை மீறி கொள்முதல் செய்ய வற்புறுத்தினால் மாதிரி நெல்லை சிதம்பரம் அலுவலகத்திற்கு அனுப்பி சான்று பெற்ற பின் கொள்முதல் செய்ய கூறியுள்ளார்.
இதனால் கடந்த 2ம் தேதி பொன்மணி ரக நெல்லை விற்பனைக்கு கொண்டு வந்த விவசாயிகள் கடந்த நான்கு நாட் களாக நெல்லை விற்காமல், இரவு-பகலாக காவல் காத்து வருகின்றனர். சுற்று வட்டாரத்தில் உள்ள மற்ற நேரடி கொள் முதல் மையங்களிலும் பொன்மணி ரக நெல் கொள்முதல் செய்யும் போது கள்ளிப்பாடி மையத்தில் மட்டும் மறுப்பது ஏன் என புரியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர்.
கள்ளிப்பாடி விவசாயிகளை காத்திட விற்பனைக்கு கொண்டு வந்துள்ள பொன்மணி ரக நெல் மூட்டைகளை அதன் தரத்திற்கு ஏற்ப விலை நிர்ணயம் செய்து கொள்முதல் செய்திட மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மானாவாரி நிலத்தில் ஓமம் பயிர் : சிறுபாக்கம் விவசாயி புதிய முயற்சி**

சிறுபாக்கம் : மலைப்பிரதேசத்தில் மட்டுமே விளையும் மூலிகை பயிரான ஓமத்தை, தற்போது சிறுபாக்கத்தில் விவசாயி ஒருவர் மானாவாரி நிலத்தில் பயிரிட்டுள்ளார். செழித்து வளர்ந்துள்ள ஓமம் பயிரினால் அப்பகுதி நறுமணம் வீசுகிறது.
மூலிகை பயிரான ஓமம் மேற்கு தொடர்ச்சி மலை பிரதேசமான தேனி, கம்பம், போடி பகுதிகளில் அதிகளவு பயிரிடப்படுகிறது. காரணம் ஓமம் சாரலில் வளரக்கூடியது. பனிப் பொழிவும் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அதிக மகசூல் கிடைக்கும். இந்நிலையில் சிறுபாக்கத்தை சேர்ந்த விவசாயி மணிகண்டன் புதிய முயற்சியாக தனக்கு சொந்தமான மூன்று ஏக்கர் மானாவாரி நிலத்தில் ஓமம் பயிரிட்டுள்ளார்.
இதுகுறித்து அவர் கூறுகையில், இலகு ரக பயிரான ஓமம் குறைந்த முதலீட்டில் அதிக விலை கிடைக்கும் என்பதால் பரிட்சாத்தமாக ஓமம் பயிட முடிவு செய்தேன். சாரலில் வளரும் பயிர் என்பதால், பயிர் செய்திடும் நிலத்தில்

தண்ணீர் பாய்ச்சுவதை தவிர்த்து, அண்மையில் பெய்த சாரல் மழை மற்றும் தற்போது பெய்து வரும் பனி பொழிவை கொண்டே பயிரிட்டுள்ளேன். பனிப்பொழிவு அதிகமாக உள்ளதால் பயிர் செழிப்பாக வளர்ந்துள்ளதால் நறுமணம் வீசுகிறது. எனது நிலத்தை கடந்து செல்பவர்கள் ஆச்சரியமாக ஓமம் பயிரை பார்த்து செல்கின்றனர். இதன் மகசூலை பொறுத்தே வரும் காலத்தில் ஓமம் பயிரிடுவதை முடிவு செய்ய உள்ளேன் என்றார்.
மூலிகை பயிரான ஓமம் மானாவாரி நிலத்தில் பயிரிட்டுள்ளதை அறிந்த வேளாண் துறை அதிகாரிகள் விவசாயி மணிகண்டன் நிலத்தை பார்வையிட்டு ஆலோசனை வழங்கினர். மேலும் இவருக்கு மானியம் வழங்கிட அரசுக்கு பரிந்துரை செய்துள்ளனர்.

**நபார்டு கிராம ஏற்பு திட்டத்தில் மண்புழு உரம் தயாரித்தல் பயிற்சி**

விருத்தாசலம் : விருத்தாசலம் அடுத்த கார்மாங்குடி கிராமத்தில் நபார்டு கிராம ஏற்பு திட் டத்தின் கீழ் மண்புழு உரம் தயாரித்தல் பயிற்சி நடந்தது.
ஊராட்சி தலைவர் ஜெயலட்சுமி தலைமை தாங்கினார். துணை தலைவர் தெய்வராணி முன் னிலை வகித்தார். உழவர் மன்ற உறுப்பினர் ஜெயக் குமார் வரவேற்றார். வேளாண் அறிவியல் நிலைய தலைவர் சாத் தையா பயிற்சியை துவக்கி வைத்தார். பயிற்சியில் மண்புழுவின் வகைகள், செயல்பாடுகள், உரத்தின் நன்மைகள் குறித்து விளக்கப் பட்டது. உதவி பேராசிரியர் தனுஷ்கோடி, ராஜ், கூட்டுறவு சங்க செயலாளர் செல்வராஜ், விவசாயிகள் குஞ்சிதபாதம், அம்பலவாணன், உழவர் மன்ற தலைவர் வெங்கடேசன் பங்கேற்றனர்.

**பயறு வகைகளுக்கு மானியம் வேளாண்துறை அறிவிப்பு**

சிதம்பரம் : வேளாண் துறை மூலம் தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பயறு வகைகளுக்கு கிலோ ஒன்றுக்கு 20 ரூபாய் மான்யம் வழங் கப்படுகிறது.
பரங்கிப்பேட்டை வட்டார வேளாண் உதவி இயக்குனர் தனசேகர் விடுத்துள்ள செய்திக் குறிப்பு: தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் மானிய விலையில் சான்று நிலை "டி9' ரக உளுந்து சிதம்பரம் மற் றும் பரங்கிப்பேட்டை வேளாண் விரிவாக்க மையங்களில் இருப்பு வைத்து வினியோகிக் கப்படுகிறது. அத்துடன் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் கிலோ ஒன்றுக்கு 20 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. எனவே விவசாயிகள் தரமான சான்று பெற்ற உளுந்து விதைகளை மான்யத்தில் பெற்று பயனடையலாம்.

**விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி**

திட்டக்குடி : கோழியூரில் விதை கிராம திட்டத்தில் தரமான விதைகளை விவசாயிகளே தயாரிக்கும் தொழில் நுட்ப பயிற்சி அளிக்கப் பட்டது.
திட்டக்குடி அடுத்த கோழியூர் நடுநிலைப் பள்ளியில் மங்களூர் வட்டார வேளாண் துறை சார்பில் 2009- 10 விதை கிராம திட்டத்தில் விதை உற்பத்தி தொழில்நுட்ப முதல் கட்ட பயிற்சி நடந் தது. பேரூராட்சி கவுன்சிலர் பூமிநாதன் தலைமை தாங்கினார். உழவர் மன்றத் தலைவர் திருஞானசம்பந்தம் முன்னிலை வகித்தார். பெருமாள் வரவேற்றார். மங்களூர் துணை வேளாண் அலுவலர் டென்சிங், வேளாண் உதவி அலுவலர் குணசேகரன், பாமாயில் களப்பணியாளர் சுந்தரபாண்டியன் பயிற்சி அளித்தனர். இதில் விதை தட்டுப்பாட்டினை போக்க தரமான விதைகளை விவசாயிகளே உற் பத்தி செய்யும் தொழில் நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டது.

**கரும்பு அபிவிருத்தி சாலைகளை சீரமைக்க எம்.எல்.ஏ., செல்வப்பெருந்தகை வலியுறுத்தல்**

திட்டக்குடி : விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த மாநில அரசுகளே விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்ற துணை முதல்வரின் கருத்து வரவேற்கத்தக்கது என, எம். எல்.ஏ., செல்வப்பெருந்தகை கூறினார். மங்களூர் தொகுதி எம்.எல்.ஏ., செல்வப்பெருந்தகை நேற்று இறையூர் ரயில்வே கேட்டில் கட் டப்படும் மேம்பாலம், முருகன்குடி வெள்ளாற் றில் மேம்பாலம் அமைக் கும் பணிகளை பார்வையிட்டார்.

பின், அவர் நிருபர்களிடம் கூறியதாவது: திருச்சி- சென்னை தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள ராமநத்தம் முதல் கருவேப்பிலங்குறிச்சி வரையிலான மாநில நெடுஞ்சாலை போக்குவரத்திற்கு லாயக்கற்ற நிலையில் உள்ளதால் மக்கள், அவதியடைந்து வருகின்றனர். கரும்பு பயிரினை அதிகம் நம்பியுள்ள பெண்ணாடம் பகுதி விவசாயிகள் கரும்பு அபிவிருத்தி திட்ட சாலைகள், கிராமப்புற சாலைகள் பழுதால் கரும் புகளை ஏற்றிக் கொண்டு வாகனங்களில் செல்ல முடியவில்லை.
எனவே, மங்களூர் தொகுதியில் உள்ள அனைத்து சாலைகளையும் உடனடியாக சீரமைக்க கோரி நெடுஞ்சாலைத் துறை செயலரிடம் முறையிட்டுள்ளேன். இறையூர் ரயில்வே கேட்டில் மேம் பாலம் அமைக்கும் பணிக் காக கொத்தட்டை வழியாக மாற்று பாதையில் போக்குவரத்தினை திருப்பி விட முடிவு செய் துள்ளனர். இதனால் போக் குவரத்து பாதிக்கும். எனவே, மேம்பாலம் கட் டும் இடத்திற்கு அருகிலேயே தனியாக துணை சாலை அமைக்க வேண்டும்.
விலைவாசி உயர் வினை கட்டுப்படுத்திட இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு சம்பந்தப் பட்ட மாநில அரசுகளே விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என துணை முதல்வர் ஸ்டாலின் டில்லி மாநாட்டில் பேசியதை வரவேற்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

**வேளாண் கூட்டுறவு சங்கங்களில் கூடுதல் பதிவாளர் திடீர் ஆய்வு**

கடலூர் : கடலூர் மாவட்டத்தில் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கங்களில் கூடுதல் பதிவாளர் சித்திரசேனன் (விற்பனை, திட்டம், வளர்ச்சி) ஆய்வு மேற்கொண்டார்.
கடலூர், சிதம்பரம், பண்ருட்டி, விருத் தாசலம் ஆகிய வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கங்களில் ஆய்வு மேற்கொண்ட போது தானிய ஈட்டுக்கடன் வழங்குவதில் அதிக முன்னேற்றம் காண்பிக்க வேண்டும். நகைக் கடன் வழங்குவதை அதிகப்படுத்தி குறியீட்டை தாண்டி வழங்க வேண்டும். பயன்பாட்டில் இல்லாமல் பழுதடைந்த தளவாட சாமான்களை ஏல விற்பனை செய்திட  அறிவுரை வழங்கினார்.
மேலும் பி.உடையூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க நவீன கட்டடத்திற்கான பூமி பூஜையில் கலந்து கொண்டு டாக்டர் எம்.ஜி.ஆர்., கூட்டுறவு மேலாண்மை நிலைய கட்டடத்திற்கான கடலூர் சரவணபவ கூட்டுறவு பண்டகசாலையின் காலி மனையை பார்வையிட்டார். பின்னர் கூட்டுறவு அச்சகத்தை பார்வையிட்டு அதிகளவில் அச்சுப்பணி மேற்கொண்டு லாபத்தை பெற அறிவுறுத்தினார்.
உடன் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய கூடுதல் பதிவாளர் ராஜேந்திரன், கடலூர் மண்டல இணை பதிவாளர் வெங்கடேசன், மத்திய கூட்டுறவு வங்கி தனி அலுவலர் மிருணாளினி உடனிருந்தனர்.

**உழவர் சந்தையில் எம்.பி., 'திடீர்' ஆய்வு**

தர்மபுரி: தர்மபுரி உழவர் சந்தையில் தாமரைச் செல்வன் எம்.பி., நேற்று காலை "திடீர்' ஆய்வு செய்தார்.தர்மபுரியில் விவசாயிகள் இடைத்தரர்கள் இன்றி நேரடியாக பொதுமக்களிடம் காய்கறிகளை விற்பனை செய்து லாபம் சம்பாதிக்க கிருஷ்ணகிரி சாலையில் உழவர்சந்தை செயல்படுகிறது. உழவர்சந்தையில் எம்.பி., தாமரை செல்வன் நேற்று காலை "திடீர்' ஆய்வு செய்தார். அப்போது அவர் உழவர்சந்தை விவசாயிகள் மற்றும் பொதுமக்களிடம் காய்கறிகள் விற்பனை குறித்து விசாரித்தார்.

காய்கறிகள் விற்பனை விலை, எடை ஆகியவை தொடர்பாக பொதுமக்கள் அளித்த புகார் குறித்து அதிகாரிகளிடம் விசாரித்தார். உழவர் சந்தையில் காய்கறிகளை எடைபோடுவதற்கு எலக்ட்ரானிக் மிஷின் வாங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக எம்.பி., தாமரைச்செல்வன் உறுதியளித்தார்நகர இளைஞரணி முரளி, ரகீம், அலுவலர்கள் இளங்கோ, நரசிம்மன், பழனி, பணியாளர்கள் அன்பழகன், கிருஷ்ணன், தீர்த்தன் ஆகியோர் ஆய்வின் போது உடனிருந்தனர்.

**மார்க்கெட்டுக்கு புது மஞ்சள் வரத்து துவக்கம் பழைய மஞ்சள் விலை குறைய வாய்ப்பு**

ஈரோடு: புதிய மஞ்சள் வரத்தாகி கொண்டிருப்பதால் இனி வரும் நாட்களில், பழைய மஞ்சளின் விலை படிப்படியாக குறைய வாய்ப்புள்ளது என வியாபாரிகள் தெரிவித்தனர். ஈரோட்டில் ஈரோடு சொசைட்டி, கோபி சொசைட்டி மற்றும் தனியார் கமிஷன் மண்டிகள் செயல்பட்டு வருகின்றன. இது தவிர, நூற்றுக்கணக்கான தனியார் ஏற்றுமதி, இறக்குமதி நிறுவனங்கள் செயல்படுகிறது. மஞ்சள் மார்க்கெட்டுக்கு ஈரோடு மாவட்டத்தில் இருந்து 60 சதவீத மஞ்சளும், கர்நாடகா, திருவண்ணாமலை, சேலம், தர்மபுரி, வேலூர் போன்ற பகுதியில் இருந்து 40 சதவீத மஞ்சளும் வரத்தாகிறது.

ஈரோடு மாவட்டத்தில் மைசூர் சம்பா, 8ம் நெம்பர், 10ம் நெம்பர் உள்ளிட்ட ரகம் அதிகளவில் பயிரிடப்படுவது வழக்கம். 8ம் நெம்பர் மஞ்சள் டிசம்பர் மாதத்தில் அறுவடை பணி துவங்கி ஜனவரி மாதத்தில் மார்க்கெட்டுக்கு வரத்தாகும். தற்போது மாவட்டத்தின் அனைத்து பகுதியிலும் மஞ்சள் அறுவடை பணி துவங்கியுள்ளது. கர்நாடகா மாநிலம், சேலம், ஆத்தூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஓசூர், திருவண்ணாமலை, வேலூர் பகுதியில் இருந்து பிப்ரவரி 15ம் தேதிக்கு மேல் புதிய மஞ்சள் வரத்தாகும். அதற்கு பின் புதிய மஞ்சள் சீஸன் வெகுவாக துவங்க ஆரம்பிக்கும். இரண்டு ஆண்டுக்கு முன் மஞ்சள் விலை அதிகபட்சமாக குவிண்டாலுக்கு 2,500 ரூபாய் வரை விலைபோனது. மஞ்சள் வியாபாரிகள் முதல் விவசாயிகள் வரை மஞ்சள் மூட்டைகளை தேக்கி வைத்தனர். ஆனால், கடந்தாண்டு மஞ்சள் எதிர்பாராத விலையாக குவிண்டாலுக்கு 13 ஆயிரம் ரூபாய் வரை விலைபோனது. மஞ்சள் விலையேற்றத்துக்கு முக்கிய காரணம் ஆன்-லைன் வர்த்தமே என வியாபாரிகள் தெரிவித்தனர். 2010 புத்தாண்டு துவங்கிய முதல் வாரத்தில் குவிண்டால் 11 ஆயிரத்து 500 ரூபாய் வரை விலைபோனது. அதற்கு அடுத்து வந்த பிப்ரவரி மாத முதல் வாரத்தில் மஞ்சள் விலை சராசரியாக 11 ஆயிரம் வரை விலை போனது. புதுமஞ்சள் வரத்தாகி கொண்டிருப்பதால், பழைய மஞ்சளின் நிலை என்ன? என்பது கேள்விக்குறியாக உள்ளது.

ஈரோடு மஞ்சள் வியாபாரிகள் கூறியதாவது:மஞ்சளில் மைசூர் சம்பா, 8ம் நெம்பர், 10ம் நெம்பர் உள்ளிட்ட ரகங்கள் நடைமுறையில் உள்ளது. இதில் 8 ம் நெம்பர் மஞ்சள் ஆண்டுதோறும் டிசம்பர் மாதத்தில் அறுவடை செய்யப்படும். மைசூர் சம்பா, 10 நெம்பர் மஞ்சள் போன்றவை பிப்ரவரி, மார்ச் மாதத்தில்அறுவடை செய்யப்படும்.

வழக்கமாக தை, மாசி மாதங்களில் தமிழகம் மட்டுமின்றி, மாநிலத்தின் அனைத்து பகுதியிலும் பனிப்பொழிவு அதிகமாக உள்ளது. இதனால் வெளிமாநிலங்களில் மஞ்சள் விற்பனை எதிர்பார்த்த அளவு இருக்காது. மஞ்சள் சாகுபடி பரப்பளவு நடப்பாண்டில் அதிகரித்தாலும், தற்சமயம் மஞ்சள் வரத்து குறைந்து தான் உள்ளது. முன்பெல்லாம் சீஸன் துவங்கினால் நாளொன்றுக்கு 2,000 மூட்டைகள் வரும். அறுவடை செய்த மஞ்சளை விலையேறும் என்ற எண்ணத்தில் விவசாயிகள் இருப்பு வைத்துள்ளனர். புதிய மஞ்சள் வரத்தாகி கொண்டிருப்பதால் இனி வரும் நாட்களில், பழைய மஞ்சளின் விலை படிப்படியாக குறைய வாய்ப்புள்ளது. பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் ஆகிய மூன்று மாதங்களில் 100 சதவீதம் புது மஞ்சள் வரத்து முடிந்து விடும் என எதிர்பார்க்கிறோம்.இவ்வாறு அவர்கள் கூறினர்.

**கூலி ஆட்கள் பற்றாக்குறையால் குண்டுவெல்லம் உற்பத்தி குறைவு: அச்சு வெல்லத்துக்கு மாறிய விவசாயிகள்**

கோபிசெட்டிபாளையம்: கோபி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் ஏற்பட்டுள்ள கூலி ஆட்கள் பற்றாக்குறையால் குண்டு வெல்லம் உற்பத்தி குறைந்துள்ளது. மாறாக அச்சு வெல்லம் உற்பத்தி அதிகரித்துள்ளது. ஈரோடு மாவட்டத்தில் அரக்கன்கோட்டை, தடப்பள்ளி மற்றும் கீழ்பவானி பாசன பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் கரும்பு பயிரிடப்படுகிறது. பெரும்பாலான கரும்பு பயிரிடும் விவசாயிகள் சர்க்கரை ஆலைகளோடு ஒப்பந்தம் செய்து கொள்கின்றனர். சர்க்கரை ஆலைகளோடு ஒப்பந்தம் செய்து கொள்ளாமல் கரும்பை சாகுபடி செய்யும் விவசாயிகளிடம் இருந்து கரும்பை விலைக்கு வாங்கி, குண்டு வெல்லம் தயாரிக்கப்படுகிறது. கரும்பின் சாறை பிழிந்து எடுத்து, மெகா சைஸ் கொப்பரையில் பதமாக காய்ச்சி எடுக்கப்படுகிறது. காய்ச்சிய கரும்பு சாறை உலர்த்தி

குண்டு வெல்லம் தயாரிக்கப்படுகிறது. குண்டு வெல்லம் தாயாரிக்க 15 முதல் 20 கூலி ஆட்கள் வரை தேவைப்படுகிறது.

கடந்த பத்து ஆண்டாக கோபி பகுதியில் விவசாயம் மற்றும் அதன் தொடர்பான பணிகளுக்கு போதிய ஆட்கள் கிடைப்பது இல்லை. நெல் நாற்று நடுவது முதல் அறுவடை செய்வது வரை விவசாய கூலி ஆட்களுக்கு வெளி மாவட்டத்தையே நம்பியிருக்க வேண்டிய நிலை உள்ளது. குண்டு வெல்லம் தயாரிப்பு பணிகளுக்கு அதிகளவில் ஆட்கள் கிடைப்பது இல்லை. இதனால் கோபி பகுதியில் குண்டு வெல்லம் தயாரிப்பு நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. அச்சு வெல்லம் தயாரிப்பு பணிக்கு நான்கு பேர் இருந்தால் போதும் என்பதால், விவசாயிகள் அச்சு வெல்லம் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த வார நிலவரப்படி 60 கிலோ மூட்டை குண்டு வெல்லம் முதல் தரத்திற்கு 1,690 ரூபாய், இரண்டாம் தரம் 1,580 ரூபாய், மூன்றாம் 1,550 ரூபாய்க்கு விற்றது. ஆனால், 30 கிலோ எடை கொண்ட அச்சு வெல்லம் மூட்டை 900 முதல் 1,000 ரூபாய் வரை விற்பனையானது.

அச்சு வெல்லம் உற்பத்தியாளர்கள் கூறியதாவது:குண்டு வெல்லத்தை விட அச்சு வெல்லம் பல வகைகளில் உணவாக, மருந்தாக பயன்படுத்தப்படுகிறது. தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் அச்சு வெல்லத்துக்கு கேரளாவில் மவுசு உண்டு. அச்சு வெல்லம் தயாரிக்க குறைந்தபட்சம் நான்கு பேர் இருந்தால் போதும். காய்ச்சப்பட்ட கரும்பு சாறை ஊற்ற தேவையான மரத்தால் செய்யப்பட்ட அச்சுகள் 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் ரூபாய் வரை கிடைக்கிறது.ஒரே நேரத்தில் 1,000 அச்சு வெல்லங்களை வேகமாக உற்பத்தி செய்ய முடியும். ஆனால் குண்டு வெல்லத்தை ஒன்றன் பின் ஒன்றாகதான் பிடிக்க வேண்டும். உற்பத்தி செலவு குறைவு, கூலி ஆட்கள் பற்றாக்குறையால் குண்டு வெல்லம் தயாரிக்க முடியவில்லை. அச்சு வெல்லம் தயாரிப்பில் விவசாயிகளுக்கு ஓரளவுக்கு லாபம் கிடைக்கிறது. இதனால் குண்டு வெல்லம் தயாரிப்பில் ஈடுப்பட்ட உற்பத்தியாளர்கள் தற்போது அச்சு வெல்லம் தயாரிப்புக்கு மாறி வருகின்றனர்.
இவ்வாறு அவர்கள் கூறினர்.

**உழவர் திறன் மேம்பாட்டு பயிற்சி**

மதுரை : வாடிப்பட்டி யூனியனில் ஆத்மா திட்டத்தின் கீழ் உழவர் திறன் மேம்பாட்டு பயிற்சி நடந்தது. விவசாயத்துறை இணை இயக்குனர் சங்கரலிங்கம் ஆலோசனைப்படி குலசேகரன்கோட்டை, கட்டக்குளம், போடிநாயக்கன்பட்டி, சி.புதூர் மற்றும் சோழவந்தான் பகுதி உழவர் குழுக்களுக்கு இப்பயிற்சி நடந்தது. யூனியன் தலைவர் வனிதா தலைமை வகித்தார். வட்டார ஆத்மா திட்ட தலைவர் பழனிச்சாமி முன்னிலை வகித்தார். உதவி இயக்குனர் ராமநாதன் வரவேற்றார். ஆய்வாளர்கள் உமாமகேஸ்வரி மீன்வளர்ப்பு பற்றியும், இளங்கோவன் பட்டு வளர்ப்பு பற்றியும் பேசினர். தோட்டக்கலை உதவி இயக்குனர் ராமலிங்கம் மானியம் மற்றும் திட்டங்கள் குறித்து பேசினார். கால்நடை உதவி டாக்டர் வெங்கிடுசாமி, வேளாண் விற்பனை அலுவலர் முருகன் ஆகியோர் பேசினர். வேளாண் அலுவலர் மகாராஜன் செயல் விளக்கம் செய்து காண்பித்தார். அலுவலர் குணசேகரன் நன்றி கூறினார். உதவி அலுவலர்கள் சுப்ரமணியன், சுப்பாராயலு, ரதிப்பிரியா, முத்தையா ஏற்பாடு செய்திருந்தனர்.

**விசுவக்குடி நீர்தேக்க திட்டத்தை விரைந்து செயல்படுத்த விவசாயிகள் வலியுறுத்தல்**

பெரம்பலூர்: விசுவக்குடி நீர்தேக்க திட்டத்தை விரைந்து செயல்படுத்தவேண்டும் என தமிழக விவசாயிகள் சங்கம் துணை முதல்வர் ஸ்டாலினிடம் மனு கொடுத்தனர்.பெரம்பலூருக்கு வந்த துணை முதல்வர் ஸ்டாலினிடம் தமிழக விவசாயிகள் சங்க மாநில தலைவர் ராமராஜன் தலைமையிலான சங்க நிர்வாகிகள் மனு அளித்தனர். அம்மனுவில் தெரிவித்துள்ளதாவது, பச்சமலையையும், செம்மலையையும் இணைத்திடும் திட்டமான விசுவக்குடி கல்லாறு நீர் தேக்க திட்டம் செயல்படுத்தப்பட்டால் சுமார் 3 ஆயிரம் ஏக்கர் நேரடியாகவும், அணைக்கட்டு அமைய உள்ள திட்ட பகுதியில் சுமார் 100 அடி உயரத்தில் திட்டம் அமைவதால் நிலத்தடி நீர் மூலம் சுமார்7ஆயிரம் ஏக்கர் என மொத்தம்

10 ஆயிரம் ஏக்கர் வயல்கள் பாசனம் பெற்று விவசாயம் செழிப்படைந்து உணவு உற்பத்தி பெருகும். மேலும் ஒரு லட்சம் மக்களுக்கு நல்ல குடிநீர் வசதிக்கு வகை செய்யும் இத்திட்டத்தினை விரைந்து செயல்படுத்த வேண்டும் என தெரிவித்திருந்தனர்.மனுவை பெற்றுக்கொண்ட துணை முதல்வர் ஸ்டாலின் அத்திட்டத்தை உடனடியாக செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். இதையடுத்து தமிழக விவசாயிகள் சங்கம் தொடர்ந்து திமுகவுக்கு ஆதரவு அளிக்கும் என விவசாய சங்க பிரதிநிதிகள் தெரிவித்தனர்.மனு கொடுத்த போது சங்க நிர்வாகிகள் நம்பிராஜன், மணிவேல், ராமசாமி, பொன்னுசாமி, கந்தசாமி, முகமது அலி மற்றும் பலர் உடன் சென்றிருந்தனர்.

**'பயோ' எரிவாயு மையம் திறப்பு**

பெரம்பலூர் : பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் கல்வி நிறுவனத்தில் ரூ. 20 லட்சம் மதிப்பில் காஸ் உற்பத்தி செய்யும் "பயோ' எரிவாயு உற்பத்தி மையம் அமைக்கப்பட்டு ள்ளது.
பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் கல்வி நிறுவனத்தில் விடுதி அமைக்கப்பட்டுள்ளது. இங்கு 9 ஆயிரம் மாணவ, மாணவிகள் தங்கி கல்வி பயின்று வருகின்றனர். எனவே சமையலுக்கு தேவைப்படும் காஸ் தேவைப்படுவதாலும், அங்கேயே கிடைக்கும் உணவு கழிவு, காய்கறி கழிவுகளை கொண்ட காஸ் உற்பத்தி செய்யக்கூடிய வகையில், பெங்களூர் விப்ரோ எக்கோ எனர்ஜி நிறுவனத்தின் மூலம் ரூ. 20 லட்சம் செலவில் பயோ எரிவாயு உற்பத்தி மையம் அமைக்கப்பட்டுள்ளது.இம்மையத்தை கல்வி நிறுவனங்களின் தாளாளர் சீனிவாசன் திறந்து வைத்தார். செயலாளர் நீல்ராஜ், துணை தலைவர் கதிரவன், இயக்குநர்கள் பூபதி,மணி, நிதி அலுவலர் ராஜசேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.நிகழ்ச்சியில் உதவி பொதுமேலாளர் சந்திரபிரியா, டிரஸ்ட் மேலாளர்கள் செந்தில், ஜெகநாதன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**விவசாயிகள் சங்க கூட்டம்**

வேப்பந்தட்டை: வேப்பந்தட்டையில் தமிழக விவசாயிகள் சங்க தாலுகா கமிட்டி கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு வட்டார தலைவர் கோவிந்தன் தலைமை வகித்தார். கூட்டத்தில் தமிழக அரசு அறிவித்தது போல் 2 ஏக்கர் இலவச நிலம் வழங்க வேண்டும் மற்றும் வகை மாற்றி வீட்டு மனைப்பட்டா வழங்க வேண்டும் என வலியுறுத்தி வரும் மார்ச் 1ம் தேதி தாலுகா அலுவலகங்கள் முன் மறியலில் ஈடுபடுவது என முடிவு செய்யப்பட்டது. கூட்டத்தில் சங்க பொறுப்பாளர்கள் செல்லத்துரை, ராஜூ, ஜெயராமன், தங்கராசு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**வேளாண் கூட்டுறவு சங்கத்தில் பருத்தி ரூ.60 லட்சத்துக்கு ஏலம்**

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் 5,210 பருத்தி மூட்டை 60 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.ஆத்தூர் புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ஞாயிற்றுகிழமை தோறும் பருத்தி ஏலம் நடந்து வருகிறது. பெரம்பலூர், அரியலூர், தர்மபுரி, விழுப்புரம், கடலூர் மற்றும் ஆத்தூர் அதன் சுற்றுவட்டார பகுதியில் விளைவிக்கப்படும் பருத்தியை விவசாயிகள் ஏலத்திற்கு கொண்டு வந்தனர்.

நேற்று நடந்த ஏலத்துக்கு ஆர்.சி.ஹெச்., ரக பருத்தி 3,800 மூட்டை, டி.சி.ஹெச்., 1,110 மூட்டை, கொட்டு பருத்தி 300 மூட்டை என 5,210 மூட்டைகள் விற்பனைக்கு வந்தன. டி.சி.ஹெச்., பருத்தி ஒரு குவிண்டால் அதிக பட்சமாக 4,716 ரூபாயும், குறைந்த பட்சமாக 4,246 ரூபாய்க்கு ஏலம் போனது. ஆர்.சி.ஹெச்., ரக பருத்தி குவிண்டால் அதிகபட்சமாக 3,516 ரூபாய், குறைந்த பட்சமாக 3,185 ரூபாய்க்கு ஏலம் போனது. கொட்டு பருத்தி ஒரு குவிண்டால் அதிகபட்சமாக 2,499 ரூபாயும், குறைந்த பட்சமாக 1,849 ரூபாய்க்கு ஏலம் போனது. நேற்று ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்துக்கு 5,210 பருத்தி மூட்டைகள் கொண்ட 1,760 குவிண்டால் பருத்தி 60 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.

**விதைச்சான்று பணி: அதிகாரிஆய்வு**

தஞ்சாவூர்: தஞ்சை மாவட்டத்தின் விதைச் சான்று பணிகளை கோவை விதைச்சான்று இயக்குனர் கார்முகிலன் ஆய்வு செய்தார்.பேராவூரணியில் குணசேகரன் வயலில் அமைக்கப்பட்டுள்ள பிபிடி 5204 ரக விதைப்பண்ணையை கோவை விதைச்சான்று இயக்குனர் கார்முகிலன் ஆய்வு செய்தார்.இந்த விதைப் பண்ணை ஆதாரம் 1 நிலை விதையினை பயன்படுத்தி ஆதாரம் 2 விதை உற்பத்தி செய்யப்படுகிறது. தஞ்சை விதை சுத்திகரிப்பு நிலையத்தில் விதைகள் சுத்தம் செய்வதையும் ஆய்வு செய்து, அடையாள அட்டைகள் பொருத்தும் பணியையும் ஆய்வு செய்தார். ஆய்வின் போது விதைச்சான்று உதவி இயக்குனர் ஞானசேகரன், விதை ஆய்வு துணை இயக்குனர் அன்பழகன், விதைப் பரிசோதனை அலுவலர் முரளி, விதைச் சான்று அலுவலர்கள் சுதா, முரளி,மோகன் மற்றும் பலர் உடனிருந்தனர்.

**விவசாயிகளுக்கு சாகுபடி ஊக்கதொகை**

வலங்கைமான்: வலங்கைமான் வட்டாரத்தில் தேசிய மூலிகை இயக்கத்தின் கீழ் வசம்பு பயிர் சாகுபடி செய்திருந்த 8 விவசாயிகளுக்கு சாகுபடி ஊக்கதொகை வழங்கப்பட்டது.வலங்கைமான் வட்டாரத்தில் மூலிகை பயிரான வசம்பு பயிர் சாகுபடி செய்திருந்த விவசாயிகள் ஒன்று சேர்ந்து குழு அமைந்திருந்தனர். இவர்களுக்கு தோட்டக்கலைதுறை மூலம் சாகுபடி ஊக்க தொகையாக ரூ.1 லட்சத்து 69 ஆயிரத்து 125 வழங்கப்பட்டது. இதற்கான நிகழ்ச்சிக்கு தோட்டக்கலை உதவி இயக்குனர் சீனிவாசன், வலங்கைமான் ஒன்றியக் குழு துணை தலைவர் அன்பரசு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.சாகுபடி குழு தலைவர் ஸ்ரீராம் செயலாளர் லால்பகதூர் ஆகியோரிடம் 8 விவசாயி களுக்கான வங்கி காசோலை வழங்கப்பட்டது. குடவாசல் ஒன்றிய குழு உறுப்பினர் சிவகுமார் உடனிருந்தார். நிகழ்ச் சியை வலங்கைமான் வட்டார வேளாண்மை உதவி அலுவலர் (தோட்டகலை) சிவப்பிரகாசம் ஏற்பாடு செய்திருந்தார்.

**வீட்டிற்கு வீடு மூலிகை தோட்டம் அமைக்கவேண்டும்: ஐ.ஜி.,**

கம்பம் : ""வீட்டிற்கு வீடு மூலிகை தோட்டம் அமைத்து, சிறுசிறு உபாதைகளுக்கு நாமே சிகிச்சையளித்து கொள்ள வேண் டும்," என கம்பத்தில் நடந்த மூலிகை ஆய்வு மைய திறப்பு விழாவில் தென்மண்டல ஐ.ஜி., கிருஷ்ணமூர்த்தி பேசினார்.

திருமூலர் மூலிகை ஆராய்ச்சி மையம் திறப்பு விழா மாவட்ட வன அலுவலர் சீனிவாசரெட்டி தலைமையில் நடந்தது. ஆராய்ச்சி மையத்தை தென்மண்டல ஐ.ஜி., கிருஷ்ணமூர்த்தி திறந்து வைத்தார். மூலிகை கண்காட்சியை பாலகிருஷ்ணன் எஸ்.பி., திறந்து வைத்தார். ஆராய்ச்சி மையத்தின் நிர்வாகி டாக்டர் கலையமுதன் வரவேற்றார். கிருஷ்ணமூர்த்தி,ஐ.ஜி., பேசியதாவது: "மூலிகை வைத்தியம் மிகவும் முக்கியமானது. பக்கவிளைவுகள் இல்லாதது. வீட்டிற்கு வீடு மூலிகை தோட்டங்கள் அமைக்க பொதுமக்கள் முன்வர வேண்டும். மூலிகை தோட்டங்கள் அமைத்துக்கொள்வதன் மூலமும், மூலிகைகள் பற்றிய அறிவை வளர்த்துக் கொள்வதன் மூலமும் நமக்கு நாமே சிறுசிறு உடல் உபாதைகளுக்கு சிகிச்சையளித்துக் கொள்ளலாம்' என்றார்.

ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ., நகராட்சி தலைவர் அம்பிகா, மகளிர் திட்ட அலுவலர் பிரபாகர் உட்பட பலர் கலந்து கொண்டனர். ஆய்வு மையத்தின் சார்பில் ராஜலட்சுமி நன்றி கூறினார்.

**பெண் விவசாயிகளை அங்கீகரித்து அடையாள அட்டை வழங்க கோரிக்கை**

திருத்துறைப்பூண்டி: ""பெண்கள் பெயரில் விளைநிலம் இருப்பது அபூர்வமான விஷயம். மேலும், பெண்களுக்கு விவசாயிகள் என்ற அங்கீகாரம் இல்லாத நிலையை மாற்ற பெண் விவசாயிகள் குத்தகைதாரர் விவசாயிகளாக இருந்தாலும் அவர்களை அங்கீகரித்து உழவர் அட்டை வழங்கப்பட வேண்டும்," என பெண் விவசாயிகள் சங்கத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. திருத்துறைப்பூண்டி அருகே உள்ள மேட்டுப்பாளையத்தில் களஞ்சியம் பெண் விவசாயிகள் சங்கத்தின் இரண்டாம் மாநில மாநாடு ஃபிப்ரவரி ஐந்தாம் தேதி துவங்கி மூன்று நாட்கள்

நடந்தது. மாநாட்டுக்கு தமிழ்நாடு பெண்கள் இணைப்புக்குழ மாநிலத்தலைவர் ஷீலு குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் பேசினார். மாற்று விவசாயம், மரபணு மாற்று விதை மற்றும் பயிர்களின் விளைவுகள், புவி வெப்பம் அடைதலும் விவசாய பாதிப்பும், பாரம்பரிய விதை மற்றும் விதை வங்கியின் அவசியம் ஆகியவை குறித்து செல்வம், சித்ராதேவி, பொன்னுதாய் ஆகியோர் பேசினர். பெண் விவசாயிகள் கூட்டமைப்பின் அவசியம் குறித்து காமேஷ்வரி, லில்லிபாய் ஆகியோர் பேசினர்.

நிறைவு நாளான நேற்று சிறப்பு பொருளாதார மண்டலத்துக்காக கையகப்படுத்தி உள்ள விளை நிலங்களை மீண்டும் விவசாயிகளுக்கு தர வேண்டும். மேலும், எதிர்காலத்தில் ரியல் எஸ்டேட் மூலமும், வளர்ச்சித்திட்டம் மூலமாகவும் விளை நிலம் கையகப்படுத்தும் திட்டத்துக்கு எதிராக அரசு கொள்கை முடிவு எடுக்க வேண்டும். அரசு புறம்போக்கு மற்றும் தரிசு நிலங்களை நிலமற்ற ஏழை, எளிய மக்களுக்கு குறிப்பாக கூட்டு விவசாயம் செய்ய ஆர்வம் உள்ள பெண்களுக்கு உடன் வழங்க வேண்டும். இயற்கை விவசாயத்தை ஊக்கப்படுத்த விவசாயிகளுக்கு சிறப்பு மானியம் வழங்க வேண்டும். பாரம்பரிய விதைகளை சேகரித்து, அவற்றை பாதுகாத்து விதை வங்கி அமைத்து பரிமாற்றம் செய்ய அரசு விவசாயிகளுக்கு சிறப்பு மானிய உதவிகள் வழங்க வேண்டும். விவசாய வேலையில் ஆணுக்கும், பெண்ணுக்கும் சமக்கூலி திட்டம் அமல்படுத்த வேண்டும். ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை அமல்படுத்த வேண்டும். பெண்கள் பெயரில் விளைநிலம் இருப்பது அபூர்வமான விஷயம். மேலும், பெண்களுக்கு விவசாயிகள் என்ற அங்கீகாரம் இல்லாத நிலையை மாற்ற பெண் விவசாயிகள் குத்தகைதாரர் விவசாயிகளாக இருந்தாலும் அவர்களை அங்கீகரித்து உழவர் அட்டை வழங்கப்பட வேண்டும் என்பது உட்பட 16 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஷீலு நன்றி கூறினார். பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த பல பெண்கள் பங்கேற்றனர்.

**விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகள் வழங்கல்**

உளுந்தூர்பேட்டை : உளுந்தூர்பேட்டையில் மானிய விலையில் வேளாண் கருவிகள் வழங் கப்பட்டது. நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கிய திருக்கோவிலூர் ஆர்.டி.ஓ., ராஜேந்திரன் வேளாண் பொறியியல் துறை மூலம் 7 லட் சத்து 54 ஆயிரத்து 856 மதிப் புள்ள கருவிகளை 40 சதவீத மானிய விலையில் ஏழு விவசாயிகளுக்கு சுழல் கலப்பை, களை எடுக் கும் கருவிகள் உள் ளிட்டவை வழங்கினார். தாசில்தார் சிவஞானம், சமூக பாதுகாப்பு தனி தாசில்தார் முத்துலட்சுமி, வேளாண் பொறியியல் துறை இளநிலை பொறியாளர் பாண்டியன் உடனிருந்தனர்.

**பருத்தி மகசூலை பெருக்க விவசாயிகளுக்கு பயிற்சி**

தியாகதுருகம் : விருகாவூர் கிராமத்தில் தீவிர பருத்தி பெருக்கத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டது.
தியாகதுருகம் அடுத்த விருகாவூரில் நடந்த பயிற் சிக்கு விழுப்புரம் வேளாண் துணை இயக்குனர் கண்ணன் தலைமை தாங்கினார். உதவி இயக்குனர் கோவிந் தன் முன் னிலை வகித்தார். தியாகதுருகம் பகுதியில் பருத்தி உற் பத்தியை பெருக்குவதற்கான வழிமுறைகளை துணை இயக்குனர் கண் ணன் விளக்கினார்.
பயிர்காப்பீட்டு திட் டம், அதன் பலன்கள் குறித்து விழுப்புரம் ஐ.சி. ஐ.சி.ஐ., வங்கியின் விற் பனை மேலாளர் லட்சுமி பேசினார். உதவி விதை அலுவலர்கள் தேவராஜ், தண்டபாணி, ரகுபதி, பழனிவேல், தங்கதுரை, சிவக்குமார் பழனிச்சாமி ஆகியோர் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர்.

**குறைந்த நெல் சாகுபடியால் வைக்கோலுக்கு பற்றாக்குறை : கேரள வியாபாரிகளால் விலை உயரும் அபாயம்**

வத்திராயிருப்பு : போதிய மழை இல்லாததால் வத்திராயிருப்பு பகுதியில் காலமுறை நெல்சாகுபடி மிக குறைந்த அளவே நடந்தது. பெரும்பாலானோர் நடவு செய்யாததால் அறுவடை சீசன் விரைவில் முடிந்து வைக்கோலுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள் ளது.
விருதுநகர் மாவட்டத் தின் நெற்களஞ்சியமான வத்திராயிருப்பு பகுதியில் இந்த ஆண்டு மழை மிகவும் குறைவாக பெய்ததால் இப்பகுதியில் உள்ள ஒருசில கண்மாய்களில் மட் டும் நீர் பெயரளவிற்கு இருந்தது. மற்ற கண் மாய்கள்

தொடர்ந்து வறண்ட நிலையிலேயே இருந்தன.இங்கு பிளவக்கல் அணை மூலம் பாசன வசதிபெறும் கண்மாய்களில் அதை சுற்றியுள்ள 10 கண்மாய்கள் தவிர மற்றவைகளுக்கு நீர் செல்லவில்லை.

அதற்குள் அணையின் நீர் முழுவதும் காலியானது. இதன் காரணமாக வத்திராயிருப்பிற்கு கிழக்கே உள்ள விவசாய நிலங்களில் இந்த ஆண்டு நெல் நடவுப்பணிகள் ஏதும் நடைபெறவில்லை. பிளவக்கல் அணை, கூமாப்பட்டி, கான்சாபுரம், சேதுநாராயணபுரம், வத்திராயிருப்பு ஆகிய இடங்களில் மட்டுமே நெல் நடவுப்பணிகள் நடந்தது. இதனால் வைக்கோலுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

வழக்கமாக அறுவடை சீசன் தொடங்குவதற்கு முன்பே உள்ளூரில் உள்ள புரோக்கர்களிடம் கேரள வைக்கோல் வியாபாரிகள் வந்து அட்வான்சாக பெரிய தொகையை கொடுத்துவிட்டுச் செல்வார்கள். இதை வைத்துக்கொண்டு புரோக்கர்கள் நெல்சாகுபடி செய்துள்ள விவசாயிகள் ஒருவர்கூட விடாமல் அறுவடைக்கு முன்பே 'டோக்கன் அட்வான்ஸ்' போட்டு வைத்து விடுவார்கள்.

அறுவடையின்போது அவ்வியாபாரிகள் கேரளாவிலிருந்து லாரிகளுடன் வந்து புக்கிங் செய்த வைக்கோல்களை அதிக அளவு ஏற்றிச் செல்வார்கள். கேரள வியாபாரிகளின் வரவாலும் அவர்கள் அதிகவிலை தருவதாலும் விவசாயிகள் உள்ளூர் வியாபாரிகளை தவிர்த்துவிட்டு கேரள வியாபாரிகளுக்கே வைக்கோலை விற்று வந்தனர். இதனால் உள்ளூர் தேவைக்கு கூட ஒரு சில நேரங்களில் பற்றாக்குறை ஏற்படும். ஆனால் இம்முறை பாதியளவிற்கு கூட நெல் விவசாயம் நடைபெறாததால் கேரளாவிலிருந்து வந்த வைக்கோல் வியாபாரிகளே வெறும் லாரிகளுடன் ஊர்திரும்ப வேண்டியிருந் தது. ஏற்கனவே புரோக் கர்களிடம் கொடுத்த அட்வான்ஸ் தொகைக்கு கூட வைக்கோல் கிடைக்கவில்லை.

உள்ளூர் தேவைக்கும் பற்றாக்குறை ஏற்பட்டுள் ளது. 400 ரூபாய் விற்றுவந்த ஒரு ஏக்கர் வைக்கோல் தற்போது ஏற்பட்ட பற்றாக் குறை காரணமாக தற்போது 600 ரூபாய்க்கு உயர்ந்துள்ளது. மாடு வளர்ப்பவர்கள் வைக் கோல் படப்பு போட்டவர்களிடம் ஒருகட்டு 25 ரூபாய்முதல் 50 வரை கொடுத்து மாடுகளுக்கு வைக்கோல் வாங்கவேண்டியுள்ளது. இதனால் மாடுவளர்ப்பவர்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர்.

**பட்டுக்கூடு மையம் மற்றும் மதிப்பு கூட்டு தொழிற்சாலை : உடுமலையில் அமையாததால் 'அதிருப்தி'**

உடுமலை : பட்டுக்கூடுகள் விற்பனை மையம் மற்றும் மதிப்பு கூட்டு தொழிற்சாலை அமைக்கும் திட்டம் பல ஆண்டுகளாக கிடப்பில் கிடப்பதால் உற்பத்தியாளர்கள் அதிருப்தியடைந்துள்ளனர்.

பட்டு வளர்ச்சி துறை கணக்கீட்டின் அடிப்படையில் உடுமலை உதவி இயக்குநர் கட்டுப்பாட்டு பகுதிகளில் 3,603 ஏக்கரில் மல்பெரி பயிரிடப்பட்டு, 2,063 விவசாயிகள் பட்டு வளர்ப்பு தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். வெண்பட்டுக்கூடுகளின் முக்கிய உற்பத்தி மையமாக உடுமலை உள்ளது. நாள்தோறும் ஒரு டன் பட்டுக்கூடுகள் கர்நாடகா மாநிலத்திற்கு விற்பனைக்கு எடுத்து செல்லப்படுகிறது.

மினிலாரிகள் மற்றும் பஸ்களில் மிகுந்த இடையூறுகளுக்கு இடையில் பட்டுக்கூடுகளை விற்பனைக்காக உற்பத்தியாளர்கள் எடுத்து செல்கின்றனர். கர்நாடகா மாநிலத்தில் பிரச்னைகள் மற்றும் திருவிழாக்கள் நடக்கும் போது தமிழகத்திலிருந்து கூடுகளை எடுத்து செல்ல முடியாமல் ஒவ்வொரு உற்பத்தியாளர்களுக்கும் பல ஆயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது.

போக்குவரத்து செலவு மற்றும் வீண் அலைச்சலை தவிர்க்க உடுமலையில் விற்பனை மையம் அமைக்க வேண்டும் என உற்பத்தியாளர்கள் பல ஆண்டுகளாக கோரிக்கை விடுத்து வந்தனர். மாநில அரசு சார்பில் நடமாடும் பட்டுக்கூடு கொள்முதல் மையம் 2007 ம் ஆண்டு இறுதியில் துவங்கப்பட்டது. உதவி இயக்குனர் அலுவலக வளாகத்தில் துவங்கிய மையம் இரண்டு வாரங்களுக்கு மேல் செயல்படவில்லை.

வியாபாரிகள் மற்றும் சர்வோதயா சங்கங்கள் கூடுகளை கொள்முதல் செய்ய உடுமலை பகுதிக்கு வர தயங்கியதால் மையத்திற்கு மூடு விழா நடத்தப்பட்டது. தொடர்ந்து மையத்தை செயல்படுத்த பட்டு வளர்ச்சி துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை. பட்டுக்கூடுகள் தேவைப்படும் பகுதிகளில் சென்று விழிப்புணர்வும் ஏற்படுத்தவில்லை. இதனால், பட்டுக்கூடுகள் மீண்டும் கர்நாடகா மாநிலத்திற்கே பயணிக்க துவங்கியது. பட்டு வளர்ச்சி துறை சார்பில் உடுமலை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சாதனை பட்டியலிலும், துறை கணக்கில் மட்டுமே நடமாடும் பட்டுக்கூடுகள் கொள்முதல் மையம் செயல்பட்டு வருகிறது. உற்பத்தியாளர்கள் வேதனையை தவிர்க்க மையம்

உண்மையாகவே செயல்பட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
தொழிற்சாலை இழுபறி: பட்டுக்கூடுகளை மதிப்பு கூட்டப்பட்ட பொருளாக மாற்றும் தொழிற்சாலைகளை நிறுவ மத்திய, மாநில அரசுகள் மானியம் வழங்குகின்றன. உடுமலை பகுதியில் அரசு பங்களிப்புடன் ஆட்டோமெட்டிக் ரீலிங் யுனிட் அமைக்கப்படும்; இதனால், உள்ளூரிலேயே பட்டுக்கூடுகளை விற்பனை செய்யலாம் என கடந்தாண்டு அறிவிக்கப்பட்டது. ஆனால், இதுவரை தொழிற்சாலை செயல்பாட்டிற்கு வரவில்லை.
பட்டு வளர்ச்சி துறை அதிகாரிகள் பெயரளவிற்கு திட்டங்களை அறிவிக்காமல் முறையாக செயல்பாட்டிற்கு கொண்டு வந்து சிரமங்களை குறைக்க வேண்டும் என பட்டுக்கூடு உற்பத்தியாளர்கள் எதிர்பார்ப்பில் உள்ளனர்.

---

தினகரன்

### குன்னூரில் டீத்தூள் விலை சரிவு

பதிவு செய்த நாள் 2/8/2010 2:56:09 AM

குன்னூர்: தேயிலை தூள் தேக்கம் காரணமாக தொடர்ந்து அதன் விலை சரிந்து வருகிறது.
குன்னூரில் நடந்த ஏலத்துக்கு மொத்தம் 16.36 லட்சம் கிலோ டீத்தூள் விற்பனைக்கு வந்தது. இதில் இலை ரகம் 10.45 லட்சம் கிலோ, டஸ்ட் ரகம் 5.91 லட்சம் கிலோ அடங்கும். ஏலத்தில் வெளிநாட்டு வர்த்தகர்களின் பங்களிப்பு குறைவாக இருந்தது. உள்நாட்டு வர்த்தகமும் களைகட்டாததால், 30 % தூள் தேக்கம் அடைந்து விலையும் சரிந்தது. இலை ரகம் சாதா கிலோ ரூ.57&60, உயர் ரகம் ரூ.85 & 120, டஸ்ட் ரகம் சாதா ரூ.56 & 59, உயர் ரகம் ரூ.90 & 124 வரை விற்றது.

### அறுவடை தொடங்கியது உளுந்து, பாசி பயறு விலை ரூ.600 குறைந்தது

பதிவு செய்த நாள் 2/8/2010 2:58:58 AM



விருதுநகர்: அறுவடை துவங்கி உள்ளதால், உளுத்தம்பருப்பு, பாசிப்பருப்பு விலை மூட்டைக்கு ரூ.300 முதல் 600 வரை சரிந்துள்ளது.
தமிழகத்தில் உளுந்து, பாசி பயறு அறுவடை தொடங்கி உள்ளது. இதனால் இந்த பயறு வகைகள் சந்தைக்கு அதிக அளவில் வர ஆரம்பித்துள்ளன. இதன் காரணமாக, உள்ளூர் ரக உளுந்து ரூ.4,000&லிருந்து ரூ.3,800 ஆகவும், விருத்தாசலம், பண்ருட்டி, விழுப்புரம் பகுதி உளுந்து ரூ.4,300ஆகவும், பர்மா உளுந்து பருவட்டு ரூ. 4,300&லிருந்து ¢4,200 ஆகவும், பொடி ரூ.3,900&லிருந்து 3,700 ஆகவும் குறைந்துள்ளது.
இதையடுத்து, உளுத்தம் பருப்பு விலையும் குறைந்துள்ளது. உருட்டு உளுத்தம்பருப்பு பர்மா பருவட்டு ரூ.5,200&லிருந்து ரூ.4,600ஆகவும், பொடி ரூ.4,700&லிருந்து 4,100 ஆகவும் குறைந்துள்ளது. லயன் உளுத்தம் பருப்பு ரூ.5,900&லிருந்து 5,600ஆகவும், தொளி உளுத்தம்பருப்பு ரூ.5,200&லிருந்து 4,900ஆகவும் குறைந்துள்ளது. பாசிப்பயறு நாடு ரூ.5,300&லிருந்து 5,100 ஆகவும், இறக்குமதி பயறு ரூ.5,800&லிருந்து 5,600 ஆகவும், பாசிப்பருப்பு நாடு ரூ.7,600&லிருந்து 7,100 ஆகவும் குறைந்துள்ளது.

### பருத்திச் செடிகளில் இலை சிவப்பு நோயை கட்டுப்படுத்த வேளாண்மை அதிகாரி ஆலோசனை

பதிவு செய்த நாள் 2/8/2010 5:58:46 AM

தேனி: தேனி மாவட்டத் தில் பயிரிடப் பட்டுள்ள பி.டி ரக பருத்திச் செடிகளில் காணப்படும் இலைச் சிவப்பு நோயை தவிர்க்க வேளாண் மை இணை இயக்குநர் விவ சாயிகளுக்கு ஆலோசனை வழங்கி உள்ளார்.
தேனி மாவட்ட வேளா ண்மை இணை இயக்குநர் நடராஜன் அறிக்கை: தேனி மாவட்டத்தில் பெரியகுளம், ஆண்டிபட்டி வட்டாரங் களில் குளிர்கால பருத்தி சாகுபடி செய்யப்பட்டு ள்ளது.
இதில் பி.டி.ரக பரு த்தி ரகங்கள் அதிக அளவில் பயிரிடப்பட்டுள்ளன. தற் போது பயிர்கள் முதிர்ச்சி மற்றும் அறுவடை நிலை களில் உள்ளது.
இப்பயிர்கள் பரவலாக ஆங்காங்கே இலைகள் சிவப்பு நிறமாக மாறி பயிர் வாடும் நிலையில் உள்ளது. இதற்கு காரணம் பயிர்களு க்கு மக்னீசியம் நுண்ணூட்ட சத்து பற்றாக்குறை ஆகும்.
இதனைஆரம்ப காலக் கட்டத்திலேயே தவிர்க்கும் பொருட்டு வேளாண்மை துறையில் தயாரிக்கப்படும் பருத்தி நுண்ணூட்ட சத்து ஏக்கருக்கு 5 கிலோ என்ற அளவில் நடுவதற்கு முன் மணல் கலந்தோ அல்லது எரு கலந்தோ நிலத்தில் சீராக தூவுதல் வேண்டும். இதனால் பருத்தி பயிரில் நுண்ணூட்ட சத்துக்கள் பற்றாக்குறை தவிர்க்கப்படு கிறது.
மேலும் மக்னீசியம் நுண்ணூட்ட சத்து பற்றாக் குறை ஏற்பட்ட பின் அதனை மேலும் பரவாமல் தடுக்கும் பொருட்டு மக்னீசியம் சல்பேட் நுண்ணூட்ட சத்து 5 கிராம் மற்றும் யூரியா 5 கிராமினை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து ஏக்கருக்கு 200 லிட்டர் வீதம் காலை பொழுதில் பருத்தி பயிர் நன்கு நனையும்படி கை தெளிப்பான் கொண்டு தெளித்தல் வேண்டும்.
தெளித்த 15 தினங்களுக்கு பின் மீண்டும் ஒரு முறை தெளித்தல் வேண்டும். இம்முறையினை பயன் படுத்தி பருத்தி விவசாயத்தில் அதிக மகசூலை பெறலாம் என மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் தெரிவித் துள்ளார்.

## தமிழகம், புதுச்சேரி மாநில அனைத்து கரும்பு விவசாய சங்க கூட்டமைப்பு அவசர செயற்குழு தி.மலையில் நடந்தது

பதிவு செய்த நாள் 2/8/2010 6:40:57 AM

திருவண்ணாமலை:
திருவண்ணாமலையில் அனைத்து கரும்பு விவசாயிகள் சங்க கூட்டமைப்பின் அவசர செயற்குழு கூட்டம் நடைபெற்றது.
திருவண்ணாமலையில் நேற்று தமிழகம் மற்றும் புதுவை மாநிலங்களில் உள்ள சர்க்கரை ஆலைகளின் அனைத்து கரும்பு விவசாய சங்க கூட்டமைப்பின் அவசர செயற்குழு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு அனைத்து கரும்பு விவசாய சங்கங்களின் கூட்டமைப்பின் மாநில தலைவர் வேட்டவலம் மணிகண்டன் தலைமை தாங்கினார். கரும்பு விவசாய சங்க தலைவர் பி.வெங்கடபதி அனைவரையும் வரவேற்று பேசினார்.
கூட்டத்தில் கூட்டுறவு சர்க்கரை ஆலை விவசாயிகள் சங்க மாநில துணை தலைவர் என்.பி. வெங்கடகிருஷ்ணன், தனியார் சர்க்கரை ஆலைகள் கரும்பு விவசாயிகள் சங்க மாநில செயலாளர் வெங்கடேசன், மாநில துணை தலைவர் முனுசாமி, ரங்கராஜன், டாக்டர் ராமகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் பேசினார்கள்.

கூட்டத்தில் ஒரு டன் கரும்புக்கு ரூ.2500 வழங்கக் கோரி விழுப்புரத்தில் வரும் 13ம் தேதி முன்னாள் முதல்வர் ஜெயலலிதா தலைமையில் நடைபெற உள்ள கண்டன ஆர்ப்பாட்டத்தில் தமிழகம் மற்றும் புதுவை மாநிலங்களில் உள்ள ஒவ்வொரு சர்க்கரை ஆலை பகுதிகளிலிருந்தும் கரும்பு விவசாயிகள் திரளாக கலந்துகொள்ளவேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கரும்பு விவசாய சங்க தலைவர் பாண்டுரங்கன் நன்றி கூறினார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**நடப்பு ஆண்டு ஜனவரி மாதத்தில்**
**புண்ணாக்கு ஏற்றுமதி 32 சதவீதம் சரிவு**

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*நடப்பு ஆண்டு ஜனவரி மாதத்தில் புண்ணாக்கு ஏற்றுமதி 32 சதவீதம் குறைந்து 2.61 லட்சம் டன்னாக சரிவடைந்துள்ளது. இது, சென்ற ஆண்டு ஜனவரி மாதத்தில் 3.84 லட்சம் டன்னாக இருந்தது. நம் நாட்டிலிருந்து புண்ணாக்கை அதிக அளவில் இறக்குமதி செய்யும் சீனா போன்ற நாடுகளில் இதற்கான தேவை குறைந்ததே, ஏற்றுமதி சரிவடைந்ததற்கு முக்கிய காரணமாகும்.*

*சீனாவின் இறக்குமதி*

*நடப்பு நிதி ஆண்டில், ஏப்ரல்–ஜனவரி மாத காலத்தில், சீனா, இந்தியாவிலிருந்து 2.83 லட்சம் டன் புண்ணாக்கு இறக்குமதி செய்துள்ளது. இதில், கடுகு புண்ணாக்கு 2.26 லட்சம் டன் என்ற அளவில் அதிகமாக இருந்தது. சோயா புண்ணாக்கு 51,636 டன்னாகவும், கடலைப் புண்ணாக்கு 5,500 டன்னாகவும் இருந்தது. சீனா, சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தில் இறக்குமதி செய்த புண்ணாக்கின் அளவு ஒட்டுமொத்தத்தில் 3.60 லட்சம் டன்னாக இருந்தது. ஆக இந்நாட்டுக்கு மேற்கொள்ளப்பட்ட புண்ணாக்கு ஏற்றுமதி 21 சதவீதம் குறைந்துள்ளது.*

*இதே பத்து மாதங்களில், வியட்நாம் நாட்டுக்கான ஏற்றுமதியும் 12.50 லட்சம் டன்னிலிருந்து 7.05 டன்னாக சரிவடைந்துள்ளது. ஜப்பான், இந்தோனேஷியா, தாய்லாந்து ஆகிய நாடுகளும் புண்ணாக்கு இறக்குமதியை குறைத்துக் கொண்டுள்ளன.*

*ஜனவரி மாதத்தில், சோயா புண்ணாக்கு ஏற்றுமதிதான் அதிகபட்சமாக 50 சதவீத சரிவைக் கண்டுள்ளது. சென்ற ஆண்டு ஜனவரி மாதத்தில் சோயா புண்ணாக்கு ஏற்றுமதி 5,55,734 டன்னாக இருந்தது. இது, நடப்பு ஆண்டு ஜனவரியில் 2,74,240 டன்னாக குறைந்துள்ளது.*

*கால்நடை தீவனம்*

*சோயா புண்ணாக்கு, பிரதானமாக கால்நடை தீவனமாகப் பயன்படுத்தப்படுகிறது. நடப்பு 2009–10–ஆம் ஆண்டு எண்ணெய் பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) இதுவரையிலான காலத்தில் இதன் ஏற்றுமதி 40.80 சதவீதம் சரிவடைந்துள்ளதாக தெரிகிறது. வியட்நாம், கொரியா, தாய்லாந்து மற்றும் இந்தோனேஷியா ஆகிய நாடுகளில் சோயா புண்ணாக்கிற்கான தேவைப்பாடு சரிவடைந்ததால் ஏற்றுமதி குறைந்து போனது.*

**உடல் நலத்தை பாதிக்கும் என்பதால்**
**மரபணு மாற்றப்பட்ட கத்தரிக்காயை அறிமுகப்படுத்த வேண்டாம்**
**அரசுக்கு சத்குரு ஜக்கி வாசுதேவ் கோரிக்கை**

*கோவை, பிப்.8–*
*உடல் நலத்தை பாதிக்கும் என்பதால், மரபணு மாற்றப்பட்ட கத்தரிக்காயை அறிமுகப்படுத்த கூடாது என்று சத்குரு ஜக்கி வாசுதேவ் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.*
*கோவையை அடுத்த வெள்ளிங்கிரி மலை அடிவாரத்தில் உள்ள ஈஷா யோகா மையத்தில் சத்குரு ஜக்கி வாசுதேவ் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது:–*

*உடல் நலத்துக்கு பாதிப்பு*

*மரபணு மாற்றப்பட்ட உணவு பொருட்களை உற்பத்தி செய்வது, உலகிற்கு சோதனை ஏற்பட்டு வருவதை காட்டுகிறது. மரபணு மாற்றப்பட்ட காய்கறிகளை உற்பத்தி செய்வதால் சுற்றுச்சூழல் அதிக அளவில் பாதிக்கப்படுகிறது.*

*பயன்படுத்தும் போது உடல் நலத்தை பாதித்து ஆரோக்கிய குறைவு ஏற்படும் என்றும் ஐரோப்பிய விஞ்ஞானிகள் தங்களது ஆய்வில் நிரூபித்து உள்ளனர். மரபணு மாற்றப்பட்ட(பி.டி.ரக) கத்தரிக்காயை உற்பத்தி செய்தற்கு பல்வேறு நாடுகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.*

அவசியம் இல்லை

100 கோடி மக்கள் வாழும் இந்தியாவில் பி.டி. கத்தரிக்காயை உற்பத்தி செய்து பயன்படுத்தி, மீண்டும் பயன்பாட்டுக்காக வெளிநாடுகளில் இருந்து விதைகளை வாங்குவது என்பது வேதனைக்கு உரியது. அமெரிக்கா, ஜப்பான் நாடுகளில் பி.டி. ரக கத்தரிக்காய் உற்பத்தி செய்யப்பட்டு வந்தாலும், மக்கள் மத்தியில் வரவேற்பை பெறவில்லை.

பி.டி. ரக கத்தரிக்காயை உற்பத்தி செய்தால், மகரந்த சேர்க்கை காலங்களில் மற்ற பயிர்களும் பாதிப்படைகின்றன. நம்முடைய நாட்டில் பல்வேறு காய்கறிகள் உற்பத்தி செய்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த நிலையில் பி.டி. கத்தரிக்காயை உற்பத்தி செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

இழந்துவிடுவோம்

இன்று மரபணு மாற்றப்பட்ட கத்தரிக்காயை உற்பத்தி செய்ய அனுமதித்தால், அதைத்தொடர்ந்து ஒவ்வொரு காய்கறி வகைகளும் ஒன்றன்பின் ஒன்றாக உற்பத்திக்கு தயாராகி விடும். இன்று பலவிதமான தானிய வகைகளை இழந்து வருகிறோம். மரபணு மாற்றப்பட்ட காய்கறியை உற்பத்தி செய்தால், கத்தரிக்காய் வகையையும் இழந்து விடுவோம்.

கொஞ்சம் கொஞ்சமாக இழந்து வரும் தானியங்களின் அருமை இப்போது தெரியாது. மீண்டும் தொடக்கத்தில் இருந்து முழுமையாக உருவாக்கினால் தான் தெரியும். பி.டி.கத்தரிக்காயை உற்பத்தி செய்தால், நாட்டின் அடிப்படையான விவசாயம் பாதிக்கப்படும். இதனால் விவசாயிகளும் பாதிக்கப்படுவார்கள்.

இந்த கத்தரிக்காயை உற்பத்தி செய்து பயன்படுத்த அரசு மவுனம் சாதித்து வருவதை பார்க்கும் போது, நடைமுறைப்படுத்த விருப்பம் இல்லாமல் இருப்பதாக தோன்றுகிறது. பி.டி. ரக காய்கறிகளை உற்பத்தி செய்தால் மண்ணின் வளம் நிச்சயம் பாதிக்கப்படும். பல்வேறு தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்து வரும் மரபணு மாற்றப்பட்ட (பி.டி) கத்தரிக்காயை அறிமுகப்படுத்த கூடாது. இது குறித்து அரசு நல்ல முடிவை எடுக்க வேண்டும்.
இவ்வாறு சத்குரு ஜக்கி வாசுதேவ் கூறினார்.